திருவள்ளுவர் ஆண்டு 2052 ஆடி-மார்கழி
டிசம்பர் - 2021

28-12-2021 - அமெரிக்கா தமிழ்நாடு அறக்கட்டளையினர் குன்றக்குடி அடிகளார் தொழிற்பயிற்சி நிலைய மாணவர்கள் 40 பேருக்கு தலா ரூ. 5000 வீதம் ரூ. 2 லட்சத்தினை உதவித் தொகையாக வழங்கினார். தமிழ்நாடு அறக்கட்டளை ஒருங்கினைப்பாளர் து. ராஜரத்தினம் I.A.S., மற்றும் மணிவண்ணன் ஆகியோர்...



மக்கள் சிந்தனை

ரூ. 8.00

சமய சமுதாய இலக்கிய
திங்களிதழ்

சிறப்பாசிரியர் : தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்



25-12-2021 அன்று சென்னையில் நடைபெற்ற மணிவாசகர் பதிப்பகத்தின் மணிவிழாவில் 60 நூல்களை வெளியிட்ட உச்சநீதிமன்ற நீதிபதி நீதியரசர் மாண்பமை. இராமசுப்பிரமணியன் அவர்களுடன்...



21-10-2021 சென்னை SRM பல்கலைக்கழகத்தின் தமிழ்ப்பேராய விருதுகள் வழங்கும் விழாவில் நிறுவனர் திருமிகு. பாரிவேந்தர், M.P., மற்றும் கவிப்பேரரசு வைரமுத்து ஆகியோருடன்...

மக்கள் சிந்தனை

நிறுவனர்: தவத்திரு குன்றக்குடி அடிகளார்

திருவள்ளுவர் ஆண்டு 2052 மாதம் : ஆடி – மார்கழி
மலர் : 35 இதழ் : 7 –12

இன்ப வாழ்வு மலரட்டும்

கடந்த காலத்தின் கசப்புகள், காயங்கள், கண்ணீர்த்துளிகள மறையட்டும். கொரனா என்ற கொடுந்தொற்று கடந்த கால வாழ்க்கையை முடக்கி விட்டது. எவ்வளவு உயிர்ப்பலிகள்! தொற்றுக்கு சாதி மத பேத அடையாளங்கள் இல்லை! எவ்வளவு மகத்தானவர்களை எல்லாம் நாம் இழந்திருக்கின்றோம்.

இப்போதும் புதிய தொற்றுக்கள். ஓமைக்ரான் போன்ற தொற்றுகளும் நம்மை அச்சுறுத்திக் கொண்டே இருக்கின்றன. எந்தப் பேரிடர்த் தாக்குதலையும் எதிர்கொண்டு நாம் வாழ்ந்து தான் தீர வேண்டும்!

"நல்லதோர் வீணை செய்தே
அதை நலங்கெடப்
புழுதியில் எறிவதுண்டோ!"

என்று பாரதி பாடினான். அழகிய வீணையிலிருந்து எழும் இனிய இசையைப் போல வாழ்க்கை இனிமையாய் இருக்க வேண்டும்.

"தேடிச் சோறுநிதந் தின்று – பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி – மனம்
வாடித் துன்பமிக உழன்று – பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து – நடை?

கூடிக் கிழப்பருவ மெய்தி – கொடுங்
கூற்றுக் கிரையெனப் பின்மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே – நான்
வீழ்வே னென்றுநினைத் தாயோ?"

வெந்ததைத் தின்று விதி முடிந்தால் மாளுகின்ற சாதாரண சராசரி மனிதன் அல்ல! சாதனை செய்யப் பிறந்தவன்! என்னைப் புதிய உயிராக்கு என்றான் பாரதி.

"நிற்பதுவே நடப்பதுவே பறப்பதுவே நீங்களெல்லாம்
சொற்பனந்தானோ? பல தோற்ற மயக்கங்களோ?
கற்பதுவே கேட்பதுவே கருதுவதே நீங்களெல்லாம்
அற்ப மாயைகளோ? உம்முள் ஆழ்ந்த
பொருளில்லையோ?
... ...
... ...
காண்பவெல்லாம் மறையுமென்றால்
மறைந்ததெல்லாம் காண்பமன்றோ?"

என்றெல்லாம் பாரதி உலகத்தை நோக்கிக் கேட்கின்றான்.

உலகம் யாருக்குப் பொய்?

வாழ்க்கையின் கடைசி நொடியை நோக்கி நகர்ந்து செல்பவனுக்குப் பொருத்தமாக இருக்கலாம். அனுதினமும் வாழ்க்கையில் அறைகூவல்களை எதிர்கொள்கின்ற இளைஞனுக்குப் பொருந்தாது. சவால்களைச் சந்திக்கின்ற களப்பணிகளில் முட்களின் மீது நடக்கின்ற பொழுது ரோஜா மலர்களின் மென்மையை எண்ணிக் கொள்ள வேண்டும்.

நம் துன்பத்தின் போது நமக்காகக் கண்ணீர் விட்டும். நம் இன்பத்தின் போது ஆனந்தக் கண்ணீர் சொரியும்

வாழ்க்கைத் துணைநலம் எப்படிப் பொய்யாகிப் போகும் என்று கேட்டான் பாரதி.

வாழ்க்கை வாழ்வதற்கே!

"மண்ணின்நல் லவண்ணம்
வாழலாம் வைகலும்
எண்ணின்நல் லகதிக்கி
யாதுமோர் குறைவிலை ...."

என்பது நமது திருஞானசம்பந்தர் வாக்கு.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற தலைப்பில் மதுரை வானொலியில் மே 1, 2021 தேதி முதல் தொடர் நிகழ்ச்சி ஒலிபரப்பாகிக் கொண்டிருக்கின்றது.

மதுரை செம்மலர் ஆசிரியர் சோழ. நாகராசன் அவர்களின் இல்லத் திருமண விழாவில் நாம் வாழ்த்திப் பேசினோம். அந்த நிகழ்வில் விழிகளில் ஒளி இல்லாத இசைக்குழுவினர் இசைப்பாடல்களை இசைத்துக் கொண்டிருந்தனர். அப்போது இசைக்குழுவின் தலைவர் பாடலினை நிறுத்தி விட்டு உரையாற்றினார்.

"பொன்னம்பல அடிகளார் உருவத்தை நாங்கள் கண்களால் காண இயலாது. அவர் அன்பின் திரு உருவம்! அருளின் இருப்பிடம்! என்பதை அவர் உரைகளின் வழியே உணர முடிந்தது. மாண்புமிகு தமிழக முதல்வர் அவர்களின் தலைமையில் நடைபெற்ற அர்ச்சகர் பணி நியமன ஆணைகள் வழங்கும் விழாவில் அடிகளார் ஆற்றிய உரை வரலாற்றுச் சிறப்புமிக்கதாய் மனிதநேயத்திற்கு மணிமகுடம் சூட்டுவதாய் அமைந்திருந்தது. உள்ளத்தை நெகிழ வைக்கும், உற்சாகப்படுத்தும் தங்களின் உரைகளைக் காலைப் பொழுதில் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற தொடரைக் கேட்ட பிறகுதான் நாங்கள் எங்களின் அன்றையப் பணிகளைத் தொடர்வோம்" என்று நெகிழ்ந்து கூறினார்.

நம்மைச் சுற்றிப் பலரும் பாராமுகமாய், கேளாச் செவிகளாய் இருக்கின்ற பொழுது விழிகளில் ஒளி இல்லாத அவர்களின் உணர்வுகளின் வழியில் அன்பின் ஒளியை நாம் உணர முடிந்தது. நம்மிடம் எந்த எதிர்பார்ப்புமின்றி நம்மீது அதீத அன்பும், அக்கறையும் கொண்டு மனதால் மட்டும் நம்மை உணர்ந்து மகிழும் இவர்களின் கள்ளங் கபடமற்ற அன்பை எண்ணி நாம் நெகிழ்ந்து போனோம்.

"மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்று தொடங்கும் தேவாரப் பாடல் திருமணச் சடங்குகளில் பாடும் பாடல் மட்டுமல்ல. மனிதன் எப்படி வாழவேண்டும் என்று உணர முயல்வதற்கே இத்தொடர். நாயன்மார்களைப் போன்று அதீத இறைபக்தியோடும், பிறர் மனம், நலம் பாதிக்கும் எதிர்மறைச் செயல்களைத் தவிர்த்து, அனைவரின் வளர்ச்சிக்கும், மகிழ்ச்சிக்கும் சுயநலமின்றிப் பொறுப்பேற்று செயல்படும் எவராலும் இந்த மண்ணில் நல்ல வண்ணம் வாழமுடியும் என்பதே நம் கருத்து.

சென்னையில் மணிவாசகர் பதிப்பகத்தின் மணிவிழா மாண்புமிகு நீதி அரசர் ராம சுப்பிரமணியன் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. மாண்புமிகு நீதியரசர் மகாதேவன் அவர்களும் வந்திருந்தார்கள். மணிவாசகர் பதிப்பக நிறுவுனர் அறமனச் செம்மல் திரு. மெய்யப்பன் அவர்கள் நமது மகாசன்னிதானத்தின் நூல்களை எல்லாம் 16 தொகுதிகளாகத் தொகுத்து வெளியிட்டு இருந்தார். இளமைக் காலத்தின் தொடக்கத்தில் மகாசன்னிதானம் சில காலம் கடியாப்பட்டியில் தங்கிக் கல்வி பயின்றுள்ளார்கள். திரு. மெய்யப்பன் அவர்களின் தந்தை குங்கிலியம் சண்முகனார் அவர்களும் நம் மகாசன்னிதானத்தின் மீது அன்பு கொண்டவர்.

1993 இல் கடியாபட்டியில் மணிவாசகர் பதிப்பக நிறுவுனர் திரு. மெய்யப்பன் அவர்களின் மணிவிழா. நம் மகாசன்னிதானம் அந்நிகழ்ச்சிக்கு சென்றுச் வாழ்த்தி வரும்படி நம்மை அனுப்பி வைத்தார்கள். நாம் துறவறம் ஏற்று முதல் பொது நிகழ்ச்சி. தமிழ் அறிஞர்கள், துணைவேந்தர்கள், பேராசிரியர்கள் நிறைந்த அவை. எப்படி பேசுவது என்று நமக்குத் திகைப்பு! மணிவிழா மேடையில் இருந்த திரு. மெய்யப்பன் அவர்கள் மூன்று விரல்களைக் காட்டி மூன்று நிமிடத்திற்குள் வாழ்த்தி முடிக்கச் சொன்னார்கள். பின் மூன்று நிமிடத்தை 1 நிமிடம் ஆக சுருக்கிக் காட்டினார்கள். நமது உரையோ 5 நிமிடத்திற்குள் அமைந்திருந்தது. இரத்தின சுருக்கமான உரை. கன்னிப் பேச்சுதான். ஆனால், கனிந்த பேச்சாக அரங்கம் உணர்ந்ததை உணர முடிந்தது. நம்முடன் நம் ஆதீனப்புலவர் மரு. பரமகுருவும் நிகழ்ச்சிக்கு வந்திருந்தார். சில ஆண்டுகளுக்குப் பிறகு திரு. மெய்யப்பன் தமது தந்தையின் சதாபிசேகப் பெருவிழாவிற்கு அழைத்திருந்தார். தனிப்பேருரையாக 1 மணிநேரம் உரை நிகழ்த்த வேண்டினார். எவ்வளவு நேரம் நாம் உரையாற்றுகின்றோம் என்பதல்ல முக்கியம். சமூகத்திற்கு நல்லது என்ன சொல்ல முடிந்தது என்பதுதான் முக்கியம்.

ஃபிர்தௌஸி என்ற பாரசீகக் கவிஞர் தன் சொந்த ஊர்மக்களின் வறுமையை விரட்ட தம் அறிவைப் பயன்படுத்த நினைத்தார். என் கவிதைகள் மன்னரின் புகழ்பாடும். ஒவ்வொரு கவிதைக்கும் ஒரு பொன்னைத் தர வேண்டும் என்று நிபந்தனை விதித்தார்.

60000 கவிதைகளைப் பாடினார். ஆனால் பாரசீக அமைச்சர் 60000 பொன்னைக் கொடுத்தால் கஜானா காலியாகி விடும் என்று 60000 வெள்ளி நாணயங்களைத்

தருவதாக அறிவித்தார் ஃபிர்தௌஸி பரிசினை ஏற்க மறுத்துச் சொந்த ஊருக்குத் திரும்பி விட்டார். பின்னர் ஃபிர்தௌஸியின் கவிதைகளைப் எடுத்துப் படித்த மன்னன் அந்தக் கவிதைகளில் கரைந்து போனார். உடனே 60000 பொற்காசுகளைக் கொடுத்து ஃபிர்தௌஸியை கௌரவிக்க வேண்டும் என்று மன்னர் ஆணையிட்டார்.

அரசு மரியாதைகளோடு பொற்காசுகளைச் சுமந்து கொண்டு ஒட்டகத்தில் வீரர்கள் கிளம்பினார்கள். ஃபிர்தௌஸியின் ஊருக்குள் ஒட்டகம் நுழைந்த போது எதிரே ஃபிர்தௌஸியின் உடலுக்கு இறுதிமரியாதை செலுத்தப் பட்டு வந்து கொண்டிருந்தது.

படைப்பாளிகள் வாழும் காலத்தில் போற்றப்பட வேண்டும்; பாராட்டப் படவேண்டும்.

வறுமையில், ஏழ்மையில் வாடிய பாரதி
"காலா! உனை நான் சிறு புல்லென
மதிக்கிறேன். என்றன் காலருகே வாடா!
சற்றே உனை மிதிக்கிறேன் ...."

என்று காலனுக்கு அறைகூவல் விட்டான். தம் வாழ்வை 39 வயதுக்குள் முடித்துக் கொண்டான். ஆனால் சாகாவரம் பெற்ற கவிதைகளைத் தந்து காலத்தை வென்ற கவிஞன் ஆகி விட்டான்.

மனிதகுல சமத்துவத்திற்கு பாரதி அளித்த பிரகடனத்தைப் போல எவராலும் தர இயலாது.

"எல்லோரும் ஓர் குலம்!
எல்லோரும் ஓர் இனம்!
எல்லாரும் இந்திய மக்கள்!

எல்லாரும் ஓர் நிறை!
எல்லாரும் ஓர் விலை!
எல்லாரும் இந்நாட்டு மன்னர்!
வாழ்க பாரத சமுதாயம் வாழ்கவே!

என்பது பாரதியின் பாடல். மனிதகுலத்திற்கு சமத்துவ சமநீதியை இதைவிடச் சிறப்பாக எப்படி பிரகடனம் செய்ய முடியும். தம் எல்லாச் சொத்துகளையும் விற்று, உறவுகளை இழந்து, வெள்ளையரை எதிர்த்துக் கப்பலோட்டிய வ.உ.சி. சென்னையில் மளிகைக் கடை வைத்து நடத்துகின்ற அவல நிலைக்குத் தள்ளப்பட்டார்.

"தண்ணீர் விட்டோ வளர்த்தோம் சர்வேசா
இப்பயிரை கண்ணீரால் காத்தோம் கருகத்
திருவுளமோ?"

என்ற பாரதியின் வைர வரிகள் வ.உ.சி.யின் தியாக வாழ்க்கை ஆயிற்று.

பாரதி மறைந்து ஒரு நூற்றாண்டு. வ.உ.சி பிறந்து ஒரு நூற்றைம்பது ஆண்டு. உலக மானுடத்தின் அடையாளங்களான பாரதியையும், வ.உ.சி. யையும் நாளும் நாளும் போற்றுவோம்.

நாமும் சமூக அக்கறையோடு செயல்படுவோம். கடந்த காலத் துன்பங்கள் மறையட்டும். கொரனா, ஓமைக்ரான் போன்ற பெருந்தொற்றுகள் பாதிக்காமல் பாதுகாப்பாக இருப்போம். இன்ப வாழ்வு எங்கும் மலரட்டும்!

என்றும் வேண்டும் இன்ப அன்பு



(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

திருவாசக உவமைகள்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

இருகை யானை

சிவநெறி சிந்தைக்கினியது; உயிர்களுக்கு உய்வு தரும் நெறி; மயக்கங்களினின்றும் விடுபெற்ற ஒருநெறி சிவநெறி, தத்துவம் விளக்கும் சாத்திரங்களும் அருளார்ந்த அனுபவத்தைத் தந்து உயிர்களை விளக்கமுறச் செய்யும் திருமுறைகளும் பெற்றுத் திகழும் பெருநெறி.

சைவத் திருமுறைகளுள் மிகச் சிறந்தது திருவாசகம். திருவாசகம் ஒரு அனுபவப் பொதிவு – ஞானப் புலம்பல். அது, உணர்த்தும் நூலன்று – உணரச் செய்யும் நூல். அனுபவத்தைச் சொல்லும் நூலன்று – இன்ப அனுபவத்தை விளைவிக்கும் நூல். இத்தகு திருவாசகம் ஓதுவோரை உயர்த்தும்! திருவாசகம், சைவம் ஆய்வுக்கு எடுத்துக்கொள்ளும் மூன்று பொருள்களை (இறை, உயிர், தளை)யும் தக்க உவமைகளுடன் காட்டி விளக்குவதில் சிறந்தது. ஆன்மாவை, உயிர் நெறியைப் பற்றித் திருவாசகம் காட்டும் உவமை இருகை யானையை ஒத்திருந்தும் என் உள்ளக் கருவைக் கண்டிலேன் என்பது மாணிக்கவாசகர் வாக்கு. உவமை மிக மிக அழகானது.

யானை மிகப் பெரிய உடலையுடையது. ஆனாலும் இத்தகு பேருடலுக்குள் இருக்கும் உயிர் நிலையையோ உயிருக்கு உயிராக விளங்கும் இறைநிலையையோ தெரிந்து தெளியும் ஆற்றல் அதற்கில்லை. அதுபோலவே மனிதர்கள் அறிவாலும், வேறு பிறவற்றாலும், சிறந்த மனித உடம்பைப் பெற்றிருந்தும் தன்னைப் பற்றியே அறியாமல் – அறிந்து கொள்ள முயற்சிக்காமல் இருந்துவிடுகிறார்கள். சீரிய சமய வாழ்வின் தொடக்கம் தன்னை அறிதலிலும் உணர்தலிலுமே தொடங்குகிறது; அமைகிறது. இதனை மெய்கண்ட நூல் தம்மையுணர்ந்து தலைவனையுணர்ந்து என்றருளுமாற்றால் உணரலாம்.

அடுத்து, யானை நீண்ட கையையுடையது. தொலைவிலிருந்தும் உணவெடுக்கும். தும்பிக்கையாலும் உணவெடுக்கும் – வாயினாலும் வாங்கும். நிறையத் தின்னும். எனினும் பருத்த தன்னுடலையே பார்க்க முடியாத குறையுண்டு. அதேபோல மனிதன் உண்டுடுத்து வாழ்ந்தாலும்

தன்னைப்பற்றியே அறிந்துகொள்ள முடியாத "அறியாமை நிலை" எண்ணியிரங்கத் தக்கது.

யானை இவ்வளவு பருத்த உடலுடையதாக இருந்தும், மிக நீண்ட கையையுடையதாக இருந்தும் தன்னுடைய முதுகில் உட்கார்ந்து தன்னை இயக்கும் மாவுத்தனை அறிந்துகொள்ளமுடியாமல் இருப்பதுபோலவே, மனிதன் கூர்த்த அறிவுடையனாக இருந்தும், தன்னுள் இருந்து தன்னை இயக்கும் இறைவனை உணர முடியாத நிலையில் இருக்கின்றான்.

யானை மதம் பிடித்தபோது, பிற உயிர்களுக்குத் துன்பமும் தொல்லையும் விளைவித்துத் தன் போக்கில் திரிகிறது. அதுபோலவே, மனிதன் ஆணவம் பிடித்தாட்டும் பொழுது தன்னைச் சார்ந்தவர்கட்குத் துன்பங்களும் தொல்லைகளும் விளைவிக்கின்றான். தன்னிச்சையாகத் திரிகின்றான். தன்னுடைய தலைவனாகிய இறைவனையே மறுக்கின்றான்.

யானை சில பொழுது தன் தலையில் தானே மண்ணை வாரிக் கொட்டிக்கொள்ளும். அதுபோலவே மனிதனும் தன்னை வினைச் சேற்றில் அழுத்திக்கொள்ளுகிறான். யானை, தன்னைக் கட்டுதற்குரிய சங்கிலியைத் தானே எடுத்துக் கொடுப்பதுபோல மனிதனும் வினைவழித் தொடர்புடைய பிறப்புக்களுக்குத் தன்னையே ஆட்படுத்திக் கொள்கின்றான். வினைகளும் வினைகளால் வரும் துன்பங்களும் உயிர்களின் சொந்தச் செயலே தவிர, இன்னொருவர் தந்தவையல்ல. நம்முடைய சொந்த பலாபலன்களும் காலத்தால் தோன்றும் நியதித் தத்துவங்களும் தலைவர் வழி நம்மிடம் கொணர்ந்து சேர்கின்றன. கொணர்பவர்மீது காய்தலும் உவத்தலும் தேவையில்லை. அவர்கள் அஞ்சற்காரர்போல அலுவல்களைச் செய்பவர்கள் – நாமே நம்முடைய நிலைமையையுணர்ந்து சிந்தையால் சிவனை நினைந்து உரிய தொண்டுகளைச் செய்து உயர்வும், உய்தியும் பெற முயற்சிக்கவேண்டும். பாடலைப் பாருங்கள் :

"இருகை யானையை ஒத்திருந் தென்உளக்
கருவை யான்கண்டி லேன்கண்ட தெவ்வமே
வருக வென்று பணித்தனை வானுளோர்க்
கொருவ னேகிற்றி லேன்கிற்பன் உண்ணவே"

(தொடரும்)

தருமையாதீனம் கலைக்கல்லூரி

பவள விழா

நிகழ்வின் பின்னூட்டம்

(இரா. செல்வநாயகம், செயலர், தருமபுரம் ஆதீனம் கல்லூரி)

தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி பவளவிழாவினை ஓராண்டு முழுவதும் கொண்டாடி வருகிறது. மாதந்தோறும் ஒரு விழாவாக கொண்டாடப்பட்டு வரும் நிலையில் செப்டம்பர் மாத நிகழ்வு மிகச்சிறப்பாக நடைபெற்றது. தருமையாதீனம் 27-வது குருமகாசந்நிதானம் தலைமையில் நடைபெற்ற விழாவில் குன்றக்குடி ஆதீனம் 46-ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார் அவர்கள் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொண்டு விழாப் பேருரையாற்றினார்கள். பாரதிதாசன் பல்கலைக்கழக ஆட்சிக்குழு உறுப்பினர் திரு M.R. இரகுநாதன் வாழ்த்துரை வழங்கினார். பல்வேறு நலத்திட்ட உதவிகள் மற்றும் நிகழ்வுகள் அரங்கேறின. அவ்விழாவின் பின்னூட்டத்தினை அறிவதற்காக 06.09.2021 அன்று மாலை 4.00 மணிக்குக் கூட்டம் ஏற்பாடு செய்யப்பெற்றது. ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் கலந்துகொண்டனர். அவர்கள் வழங்கிய கருத்துகளில் ஒருசில கருத்துகள் மட்டும் குருமகாசந்நிதானம் அவர்களின் பார்வைக்கு அனுப்பப்படுகிறது.

- பொதுவாக தற்போதைய கல்வி நிறுவனங்கள் மாணவர்களிடமிருந்து பணம் பெறுவதையே குறிக்கோளாகக் கொண்டுள்ளன. ஆனால் தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரி மட்டும் தான் ஓராண்டில் 100 மாணவிகளுக்கு இலவச தையல் பயிற்சியை வழங்கியதுடன் அவர்களுக்கு இலவசமாக தையல் எந்திரத்தையும் வழங்குகிறது.
- தவத்திரு குன்றக்குடி அடிகளார் அவர்கள் ஒரு துறவியாக இருந்து இவ்வளவு அரிய கருத்துக்களை வழங்கியதோடு மட்டுமல்லாமல் வெளிநாட்டு அறிஞர்கள் பற்றியும் அறிவியல் சிந்தனைகளையும் எடுத்துரைத்தது வியப்பாக இருந்தது.
- "கயிலைக் குருமணி உயர்நிலைப்பள்ளி" எனப் பெயரிட்டதன் மூலம் குன்றக்குடி ஆதீனத்திற்கும், இத்தருமையாதீனத்திற்கும் இடையேயுள்ள தொடர்பினை அறிந்துகொண்டோம். குருபக்தி எவ்வளவு ஆழமானதாக இருந்தது என்பதை அறிந்துகொண்டோம்.

- அடிகளார் அவர்கள் கூறிய ரொட்டி வெண்ணெய் வியாபாரிக் கதை மிகவும் ரசிக்கவும் சிரிக்கவும் வைத்தது.
- மாதா, பிதா, கூகுள் தெய்வம் என்று இன்றைய எதார்த்தமான மாணவர் மனநிலையை அடிகளார் அவர்கள் அற்புதமாக விளக்கினார்கள்.
- "இணைய தளத்தில் எல்லாச் செய்திகளும் கிடைக்கின்றன. இதய தளத்தில் அன்புச் செய்திதான் கிடைப்பதில்லை" அற்புதமான கூற்று.
- "தமிழறிஞர்கள் பிச்சை பெற்றுக்கூட தமிழினை வளர்த்தார்கள் என்று அடிகளார் அவர்கள் கூறியதைக் கேட்கும்போது உள்ளபடியே நாம் நம் தாய்மொழிக்காக எதையுமே செய்யவில்லையே என்ற குற்ற உணர்வு ஏற்படுகின்றது.
- ஒரு துறவி எப்படி பல்துறை அறிஞராகவும் நிர்வாகத்திறன் கொண்டவராகவும் இருக்கவேண்டும் என்பதற்கு இரண்டு சந்நிதானங்களுமே சாட்சி.
- வ.உ.சிதம்பரம் பிள்ளையின் தியாகம் ஒவ்வொரு இளைஞனும், தேசபக்தனும் தன் நெஞ்சில் பதியவைக்க வேண்டிய ஒன்றாகும். தேசத் தியாகியின் கண்ணீர்க் கதை கண்ணீரை வரவழைக்கிறது.
- ஆசிரியர் மாணவர் உறவுக்கு சில்வர் டங் சீனுவாச சாஸ்திரியின் வாழ்க்கை, மகாவித்வான் மீனாட்சிசுந்தரம் பிள்ளையின் வாழ்க்கை சிறந்த எடுத்துக்காட்டு.
- விழா சிறப்பாகவும் தொய்வில்லாமலும் நடைபெற்றது. அடிகளார் அவர்கள் பேச்சினைக் கேட்டபோது நேரம் போனதே தெரியவில்லை. ஆற்றொழுக்கான நகைச்சுவை கலந்த, தன்னம்பிக்கையூட்டும் அற்புதமான உரையை அவர்கள் வழங்கினார்கள். இன்னும் சில மணித்துளிகள் பேசமாட்டார்களா என்ற ஏக்கத்தை ஏற்படுத்தியது.
- ஒரு பேச்சாளர் எப்படி அவையை தன்வசப்படுத்தவேண்டும் அல்லது தன்வசப்படுத்த முடியும் என்பதற்கு அடிகளார் அவர்களின் பேச்சு ஒரு சிறந்த உதாரணம். உதாரணக் கதைகள், நகைச்சுவை, மனத்தில் தைக்கும்படியான குரல் அழுத்தம் என அவர்கள் உரை கேட்டது எனது வாழ்நாளில் ஒரு பாக்கியமாகக் கருதுகிறேன். நானும் அவர்களைப் போன்ற பேச்சாளர் ஆகவேண்டும் என்று முடிவு செய்துவிட்டேன். இந்த வாய்ப்பை ஏற்படுத்திக்கொடுத்த கல்லூரிக்கு என் நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

குன்றக்குடி ஆதீனம்

(புலவர். சு. துரைச்சாமி எழுதிய
சமுதாயப் புரட்சியில் சமயங்களின் பங்களிப்பு என்று நூலிலிருந்து)

தவத்திரு தெய்வசிகாமணி அருணாசல தேசிக பரமாச்சாரி அவர்களைத் தெரியுமா? என்றால் தெரியாது என்றுதான் பலரும் பதிலளிப்பர். ஆனால் குன்றக்குடி அடிகளார் என்றால் தெரியும் என்றே பதில் வரும். சமுதாயத் துறவி, புரட்சித் துறவி என்றெல்லாம் பாராட்டப்பட்டவர் அவர்.

தமிழில் வழிபாடு

சொல்லேதும் புரியாத, பொருளேதும் தெரியாத வடமொழிதான் வழிபாட்டு மொழியாக - அர்ச்சனை மொழியாக இருந்தது. வலுவான கட்டமைப்பிற்குள் புகுந்து, அதனை உடைத்தெறிந்த பெருமை இந்த ஆதீனத்திற்கே உண்டு. குன்றக்குடி மடம் இன்றேல் தமிழ் வழிபாடு இல்லை.

முத்தமிழால் வைதாரையும் வாழவைப்பான் முருகன், செத்தாரையும் எழுப்பிவிடும் தீந்தமிழ்ப்பாட்டு, ஊமைகளைப் பேச வைக்கும் உன்னதத் தமிழ்; உலகெலாம் போற்றும் உயர் தமிழ். கற்கோயிலும் சொற்கோயிலும் கட்டி வைத்த நம்மவர்க்கு நம் மொழியில் வழிபடப் போராட வேண்டியிருந்தது. அந்தப் போராட்டத்தை முன்னெடுத்து குன்றக்குடி மடம், அதன் பலனாக இறைவன் முன் இனிய தமிழ்ப் பேச முடிந்தது.

மண்டைக்காடும் மடமும்

1982ல் குமரிமுனை மண்டைக்காட்டில் மதக்கலவரம் பூகம்பமாக எரிமலையாக எழுந்தது. சுனாமியாய், சூறாவளியாய்ச் சுழன்றது. மண்டைக்காடு மயானக் காடாக மாறிக்கொண்டிருந்தது.

காவி உடையை வரிந்து கட்டிக்கொண்டு விரைந்தார் அடிகளார. அவருடன் தொடர்ந்தார் ஆரோக்கியசாமி என்ற வெள்ளாடைத் துறவி அடக்கவேண்டிய அரசு அடங்கி வேடிக்கை பார்த்தது. ஆன்மீகத்தின் ஆண்மை அங்கு சென்றது. ஆணவப்புயல் அடங்கி அமைதித் தென்றல் வீசியது.

சமுதாயப் பணிகள்

முன் சொன்ன மண்டைக்காட்டு நிகழ்வு மிகச் சிறந்த சமுதாயப் பணியன்றோ? அது மட்டுமில்லை அருள்நெறித் திருக்கூட்டம், தெய்வீகப் பேரவை, குன்றக்குடிக் கிராமத் திட்டம் எனப் பல்வேறு அமைப்புக்கள் மூலம் செய்த சமய - சமுதாயப் பணிகள் ஏராளம்.

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

சிலம்பில் தொல்காப்பியப் பதிவு - XV

(தமிழாகரர். தெ. முருகசாமி)

சிலப்பதிகாரம் ஒரு நாடகக் காப்பியம். அது இயல், இசை, நாடகம் என்ற முத்தமிழ் பாவிய காப்பியமானாலும் நாடகத்தமிழ் இலக்கணம் மிகவும் பொதுளிக் காணப்படுதலால் முத்தமிழ் பாவிய காப்பியம் என்ற பொதுமைக் கருத்திலிருந்து சிறப்பாக நாடகத்திற்கே உரிய காப்பியமாகக் கருதப்படுவதே சிலப்பதிகாரத்தின் தனித்தன்மையாகும்.

இந்நாடகக் காப்பியத்தின் பிறப்பும் வளர்ப்பும் தமிழ்நாட்டையே சார்ந்ததானாலும் அதாவது பொருண்மையும் கதையும் தமிழுக்கே உரியனவாயினும் அதனை வடிவமைத்த பாங்கும் உத்தியும் உலக நாடகக் காப்பியங்களோடு ஒப்பிடும் சிறப்பும் சீர்மையும் பெற்றதால் நெஞ்சையள்ளும் சிலப்பதிகாரம் என்ற பாரதியாரின் விருது பெற்றது.

எந்த ஒன்றும் இலக்கியமாவதற்கு முன்னர் அது பேச்சு இலக்கியமாய் (ORAL LETERATURE) மலர்ந்த நிலையில், பூவின் மகரந்த சேர்க்கைப்படி பின்னர் இலக்கிய விருட்சமாகும் என்பது மேலை நாட்டு இலக்கியக் கொள்கையாகும். இதைத்தான் கல்வி முறை அடிப்படையில் நாடோடி இலக்கியம் அல்லது வாய்மொழி இலக்கியம் (FOLK) என்பர்.

இந்த முறைப்படி சிலப்பதிகாரத் தோற்றத்திற்கு வஞ்சிக் காண்டத்தின் குன்றக்குரவையே மூலமாக அமைகிறது. கணவனை இழந்த கண்ணகி, பாண்டிய நாட்டைக் கடந்து சேர நாட்டு எல்லையின் மலையிலுள்ள ஒரு வேங்கை மரநிழலில் வந்து தங்கினாள்.

கண்ணகியின் அவலமான நிலைகண்ட குன்றத்து மக்கள், ஒற்றை மார்பிழந்த அவலத்துடன் எங்கள் முன் நிற்கும் நீவிர்தாம் யாரோ என வினவினர். எம் குலத்து வள்ளிபோல்வீர் எனக் குன்றக் குறவர்கள் கூறிய உறவு முறைமையைக் கேட்ட கண்ணகியும் வாஞ்சையுடன் தீவினை காரணமாகப் பாண்டியனும் மதுரையும் அழிய நானும் என் கணவனை இழந்தவாறு இங்கு வந்ததாகக் கூறிய அளவில் குன்றத்தவரெல்லாம் கண்ணகியைக் கைகூப்பி வணங்கினர். இந்நிலையில் விண்ணிலிருந்து ஓர் ஆடவனோடு வந்த வானவூர்தி ஒன்றில் அக்கண்ணகி, வந்தவனைக் கணவனாக அடையாளம் காட்டிய அளவில் மேலுலகம் எய்தியதைக்

குன்றத்தவர் அனைவரும் கண்டனர். இதனால் தன் நாட்டடைந்த இவளைத் தெய்வமாகப் போற்றி வழிபட எண்ணிய மக்கள் மலை நாட்டு முறைப்படி முருக வழிபாட்டோடு வழிபட்டனர்.

இந்நிலையில் இக்குன்றத்து மலைவளம் காண வந்த சேரன் செங்குட்டுவனிடம் மக்கள் தாம்கண்ட வியப்பை விவரித்தனர். கேட்ட செங்குட்டுவன், உடன் வந்த சாத்தனாரிடம் வினவ, அவர் புகார் நகரக் கதையிலிருந்து, குன்றக்குரவை வரையான கதையை விவரித்தார்.

ஆக சிலப்பதிகாரக் கதையின் தோற்றம், மக்களிடமிருந்து அமைந்து இலக்கியமான முகிழ்ப்பை அடையும்போது அதற்கு வாய்மொழிக் கூறான வழக்கே அடிப்படையாய் இருந்தது என உணரும் போதுதான் தொல்காப்பியர் கூறும் இலக்கிய முகிழ்ப்பு பற்றிய கருத்தாடலில் "வனப்பு" என்ற பொதுத் தலைப்பின் கீழ், புலன் என்ற இலக்கிய வனப்பைச் சிலப்பதிகாரத்தோடு பொருத்திப் பார்க்க உதவுகிறது.

சேரி மொழியால் செவ்விதில் கிளந்து
தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின்
புலன் என மொழிப புலன்உணர்ந் தோரே!

– (தொல்.பொருள்.செய்)

பொதுவாக மொழி வழக்கு என்பது பேச்சு, எழுத்து என்ற இரு வகைப்படும். பேசுவதுபோல எழுதுதலோ எழுதுவதுபோல் பேசுவதோ இயலாததாயினும் மொழியில் முகிழ்க்கும் இலக்கியம், பேச்சுவழக்கின் வழியே முதலில் உணரப்பட்டுப் பின்னர் செம்மையடையும் என்பதையே தொல்காப்பியர் சேரி மொழியால் செவ்விதில் கிளந்து என்றார்.

இந்தச் சேரி மொழி என்பதைச் சிற்றூர்ப் பேச்சு வழக்காக உணரப்படும். இதைப் பாடி மாற்றம் என்பதாகப் பேராசிரியர் கூறினார். பாடி என்பது சிற்றூர், மாற்றம் என்பது பேச்சு வழக்கு. இந்தப் பேச்சு வழக்கின் அடிப்படையில்தான் கண்ணகி தன்னைப் பற்றிய வரலாற்றைச் சுருக்கமாகக் கூறக்கேட்ட மக்கள் அதை மன்னனிடம் மொழிந்தனர்.

கேட்ட மன்னன் இது பற்றிய கருத்தை அருகிருந்த சாத்தனாரிடம் வினவினான். அவரோ தமக்கு மதுராபுரித் தெய்வம் உணர்த்தியதாகக் கூறினார். அவற்றை உடனிருந்து கேட்ட இளங்கோவடிகள் சிலப்பதிகாரம் பாடத் திட்டமிட்டார்.

ஈண்டுக் கண்ணகியிடமிருந்து குன்றக்குறவர்களுக்குப் பரிமாறப்பட்ட கதைச் செய்தி, மன்னனுக்குத் தெரிவிக்கப்பட்ட அளவில் மன்னனுக்குச் சாத்தனார் தாம் கேட்டறிந்ததைக் கூற, இவற்றையெல்லாம் ஒட்டு மொத்தமாய் அறிந்த இளங்கோ இலக்கியம் பாட எத்தனிக்கின்றார் என்பது சிலப்பதிகாரத்தின் தோற்ற வரலாறாகச் சிலப்பதிகாரத்தின் பதிகப்பகுதியிலிருந்தும் நூலிலிருந்தும் உணரமுடிகின்றது.

செய்யுள்களின் கூட்டமே இலக்கியம். அதன் வடிவ அமைப்பு முப்பத்து நான்கு உறுப்புக்களால் அமைவதாகத் தொல்காப்பியர் பொருளதிகாரச் செய்யுளியலின் தொடக்கத்தில் வரையறுக்கையில் “புலன்” என்ற வனப்பை ஓர் உறுப்பாகக் கூறுகிறார்.

மக்களின் பேச்சு மொழியிலான கதை, நாடகம் அல்லது கூத்து, இலாவணி என்பன இன்றைய கிராமியப் பாணியில் அமைவதைத்தான் “புலன்” என்பதாகும் என எளியதொரு விளக்கத்தை வெள்ளை வாரணனார் தந்தார். இதையே தொல்காப்பியர் தேர்தல் வேண்டாது குறித்தது தோன்றின் புலனாம் – என வழக்குச் சொல் வகையிலேயே ஆராயாமல் தொடுக்கப்பட்டுப் பொருள் புலப்படுத்துவது புலன் என்னும் செய்யுளாம் எனத் தொல்காப்பிய உரையாளரான இளம்பூரணர் கூறினார்.

இளம்பூரணர் கூறியதற்குக் கூடுதலாக நச்சினார்க்கினியரும் பேராசிரியரும் “புலன்” என்பதை “அவை விளக்கத்தார் கூத்து” முதலாகிய நாடகச் செய்யுளாகிய வெண்டுறைச் செய்யுள் என விளக்கம் அளித்தனர். ஆக, வாழ்வியலை இலக்கியமாக மாற்றுவதே நாடகம் என நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும், பாடல் சான்ற புலனெறி வழக்கம் என்பதாகப் பொருளதிகாரத் தொடக்கத்திலேயே தொல்காப்பியம் வரையறுத்துவிட்டதால் வாழ்வை எல்லோரும் உணர்வதைக் காட்டிலும் புலவர்கள் உணர்வதால், அது கல்லின் எழுத்தாய்க் காலாகாலம் நிற்கும் எழுத்துத் தரத்தில் நாடக எழுத்தாக ஆகும் போது மொழியும் மொழி பேசுவோரின் வாழ்வும் சிறப்பாகத் தமிழருடையதாகச் சிரஞ்சீவித்தரத்தை அடைந்துவிடுகிறது. இந்நுட்ப திட்பத்தை உணர்ந்த பல்கலை வித்தகரான இளங்கோவடிகள் தாம் எழுதும் சிலப்பதிகாரத்தைத் திட்டமிட்டவாறே நாடக நூலாக உணர்த்த உரையிடையிட்டப் பாட்டுடைச் செய்யுள் என்பதாகப் பிரகடனப்படுத்தினார்.

இந்நாடக வழக்கில் புறந்தள்ள வேண்டிய புனைந்துரை வழக்குகளை நீக்கிப் புகழாம் பொற்புகளை மட்டுமே கொள்ளும்போதுதான் நாடகத் தமிழ் இலக்கியம் பிறநாட்டு நல்லறிஞர் நாடகத்தோடு ஒத்தும் உயர்வும் உடையதாகச் சிலப்பதிகாரம் ஒன்றே, யானை யீன்ற ஒரே குட்டியாய்க் குவலயச் சிறப்பைப் பெற்றது எனலாம்.

அதனால்தான் புலன் என மொழியப்படுவதான நாடக வனப்புச் செய்யுளைப் புலன் உணர்ந்தோரே செய்தனர் என்றார் தொல்காப்பியர். புலன் என்றது ஐம்புல நுகர்ச்சியாலான ஒட்டுமொத்த உணர்வை அறிவுப் புலனில் உழுதலையே அய்யன் திருவள்ளுவர் "புலம் வென்ற புன்மையில் காட்சியவர்" (174) என ஐம்புலன்களை வென்றவரே புலனுகர்ந்தோர் ஆவர் என்றார். புலம் – புலன் இரண்டும் ஒரு பொருளினவாகும். புலனை வெல்லாதவர் – புலவரேனப்படுதல் இல்லை. புலனைவென்றவரே புலவர் என்கிறது திருக்குறள்.

நிலவரை நீள்புகழ் ஆற்றின் புலவரைப்
போற்றாது புத்தேள் உலகு.

என்றதில் புலவர் என்பார் தேவரை ஆகும். அவர் புலனுடையவரேயன்றிப் புலன் வென்றவர் ஆகார் என்பதாக இக்குறளுக்கு மணக்குடவர் உரைகண்டார். இந்த உண்மை, "புலன் வென்ற புன்மையில் காட்சி" (174) என்றதால் உணர்த்தப்பட்டதோடு அத்தகையோரே புலனுகர்ந்தோர் ஆவர் ஆகும்.

இப்புலனுகர்ந்தோர் எனும் சொல், புலன் உணர்வைக் கட்டுப்பட்ட தன் நுகர்ச்சியையும் கட்டுப்படாததான நுகர்ச்சி இன்மையையும் ஒருசேர உணர்த்தியதால் வள்ளுவர்.

ஐந்தவித்தான் ஆற்றல் அகல்விசும்பு ளார் கோமான்
இந்திரனே சாலும் கரி. (25)

எனத் தேவர்களின் தலைமையை அடையாளம் காட்டினார் என உணரும்போது மணக்குடவர் புலவரை என்றது தேவரை என்றதன் நுட்பம் தெளிவாகிறது.

இந்நிலையில்தான் இளங்கோவடிகள் வள்ளுவர் கூற்றுப்படி நிறை மொழி மாந்தராய்க் (28) குணவாயில் கோட்டத்திலிருந்து இக்காவியம் பாடினார் எனச் சிலப்பதிகாரப் பதிகம் பதிவு செய்கிறது. இளங்கோவடிகள்

தங்கி இருந்து காவியம் யாத்த இடம் – குணவாயில் கோட்டம் என்ற நூல் செய்ததற்குத் தகுதியான இடம் என்பதை உணர்த்துகிறது.

சேரநாட்டின் கிழக்கு எல்லையே குணவாயிலாயினும் நற்குண நற்செய்கைகளை உடைய இளங்கோவின் இளமைத் துறவின் தூய்மையையே குணவாயில் என்ற சொல் காட்டுவதாய் உணரலாம். இத்தகு புலனை வென்ற காட்சியும் மாட்சிமையும் பெற்றதால்தான் இளங்கோவடிகள் தொல்காப்பியர் கூற்றுப்படி புலனுணர்ந்தோரே எனப்பட்டார்.

அதாவது புலன் உணர்தல் வேறு, புலன் நுகர்தல் வேறு, நுகர்தலில் ஆசாபாச ஆசைகள் அமைந்துவிடும். இதைத்தான் இந்திரனே சாலுங் கரி (25) என்பதாக வள்ளுவர் அடையாளப்படுத்தினார். ஆனால் புலன் உணரும்போது கீழான நுகர்வு தள்ளப்பட்டு மேலான உணர்வால் (அறிவால்) "உணர்ச்சி வாயில் உணர்வோர் வலித்தே" (தொல்.சொல்.உரி.95) என்றபடி உணர்தலுக்கான உந்து ஆற்றல் உணர்வோரின் உணர்ச்சி அறிவு வலிமையைப் பொறுத்துள்ளதாம் என்கிறார் தொல்காப்பியர். இதுவே புலன் உணர்வாம் என்க!

ஈண்டு உணர்ச்சி வாயில் என்றது உணர்தலுக்கான உந்து ஆற்றலை உணர்த்தினாலும் உணர்தலின் செயல்பாடே உணர்ச்சியாம் என்க. அதாவது அகத்தளவில் உணரும் உணர்வு வெளிப்படையாகச் செயல் வடிவம் பெறுவதே உணர்ச்சியாம் என்க, அந்த வகையில் சிலம்பின் கதைகளையெல்லாம் கேட்டவை கேட்டவை விடாது உளத்து அமைத்து மனக்கோட்டமும் சொற்கோட்டமும் இன்றி உணர்ச்சிவாயில் விளிம்பிலிருந்த இளங்கோவடிகள் குணவாயிலில் அமர்ந்து தமையன் சேரன் செங்குட்டுவன் கண்ணகிக்குக் கற்கோவில் கட்டத் திட்டமிட்டாலும் இளங்கோவாம் தம்பி – இளமைக்கால வளமான அறிவின் இளம் பூரணராய்க் கண்ணகிக்குச் சொற்கோயில் கட்டத் திட்டமிட்டார் என்பதே சிலப்பதிகாரப் பதிகப் பதமாம் என்பது கருத்து.

இக்குணவாயில் பற்றிய இட ஆய்வு சிந்தனைக்குரிய விருந்தாகும். ஏனெனில் இளங்கோவடிகள் குணக்குன்றாயிருந்து சிலம்பினை ஒலிக்கச் செய்தார் என்பது குணவாயில் என்றதன் பண்பைச் சுட்டினாலும் அஃதோர் இடம் என்றதன் கருத்தும் இளங்கோவின்

வாழ்வோடும் காப்பியத்தோடும் தொடர்புடைய புலன் நுகர் சொல்லாக உள்ளதைச் சிந்தித்தல் சிந்தனைக்காம் விருந்தேயாம் எனலாம்.

குணவாயிற் கோட்டத்து அரசு துறந்திருந்த
குடக்கோச் சேரல் இளங்கோவடிகள்

எனப் பதிகம் குறிப்பிடும் செய்தியில் உள்ள குணவாயில் பற்றிச் சிலப்பதிகார உரையாசிரியரான அரும்பத உரையாசிரியர் கூறுகையில் "குணவாயில் கோட்டத்துக் கடவுள் முன்னர்த் துறவு கொண்டிருந்த இளங்கோ" என்றார். மற்றோர் உரையாசிரியரான அடியார்க்கு நல்லார் என்பவர், வஞ்சிமாநகரின் கீழ்த்திசையில் உள்ள அருகன் கோயில் அமைந்த குணவாயில் எனும் ஊரில் துறவு மேற்கொண்ட இளங்கோ என்றார்.

இவ்விருவரின் குறிப்பால் இளங்கோவடிகள் சமணரா? அல்லது சமணரல்லாதவரா? எனச் சிந்திக்குமாறுள்ளது. ஏனெனில் அரும்பத உரையார் குணவாயிலின் கடவுள் முன்னர் எனப் பொதுப்படக் கூற அடியார்க்கு நல்லாரோ அருகக்கடவுள் என்பதால் குணவாயில் கோட்டத்துள்ள கடவுள் யார் என அறிதல் இன்றியமையாததாகிறது.

கோட்டம் என்ற சொல் கோயிலைக் குறிக்கும் பொதுச் சொல், எச்சமயத்திற்குமான பொதுச் சொல் என்பதால் அருகருக்கு மட்டுமாக அடியார்க்கு நல்லார் உரைப்பது சரியன்று, மேலும் துறவு என்றது சமண சமயத்தவர்க்கே உரித்தானதாகக் கருதிக்கொண்டு குணவாயில் கோட்டத்துத் துறவு வீற்றிருந்த எனச் சமணத்தை நினைப்பிப்பதாகக் கருதுவதும் சரியன்று, இளமையில் துறந்த பாலயோகியர் பலர் உள்ளனர். வடக்கே விவேகானந்தரும் தெற்கே இரமணமகரிஷியும் இளமையில் துறந்தவர்கள் ஆவர். மேலும் அக்கோயிலான குணவாயிலைத் திருவாஞ்சைக் களமாகக் கருத வாய்ப்புண்டு.

ஒரு காலத்தில் சேரர் தலைநகராகக் கொடுங்கோளூர் இருந்தது. அங்கிருந்த சேர மரபினரான பெருமாக்கோதையார் என்பவர் சிவபத்தராய் வாழ்வு துறந்து அருகிலுள்ள திரு அஞ்சைக்களம் என்னும் சிவத்தலத்தில் சிவத்தொண்டு புரியலானார் இந்நிலையில் கொடுங்கோளூரை ஆண்ட செங்கோற் பொறையன் தன் அரச பதவியைத் துறந்து துறவு பூண்டதால் அடுத்த மன்னரைத் தேர்வு செய்ய

அனைவரும் திருஅஞ்சைக்களம் என்னும் சிவத்தலத்தில் சிவத்தொண்டு புரிந்துவந்த சிவஊழியரான பெருமாக்கோதையாரை அரசராக்கினார். இந்த மாக்கோதையாரே அறுபத்து மூவரில் ஒருவரான சேரமான் பெருமாள் நாயனாராவார்.

தெய்வீக சாநித்தியம் வளரும் இந்தத் திருஅஞ்சைக் களத்தைத் திருவாஞ்சைக் களமாகவும் கூறுவர். அன்பு மிகுதியை வாஞ்சை என்ற சொல்லால் குறித்தலுக்கேற்ப இத்திருத்தலத்தில் தொண்டூழியம் செய்த சேரமான் பெருமாளும் நல்ல பல தெய்வ நூல்களைச் செய்தவராவார். 11ஆம் திருமுறையில் உள்ள பொன்வண்ணத்தந்தாதி, திருவாரூர் மும்மணிக்கோவை, திருக்கைலாய ஞான உலா என்பன முத்திரை பதித்த சைவ நூல்களாகும். இங்ஙனமாகிய திருஅஞ்சைக்களத்தைத்தான் அப்பரடிகள் அடைவுத் திருத் தாண்டகப்பாடலில் "குணவாயில்" எனச் சேரநாட்டுத் தலமாகக் குறிக்கின்றார்.

இத்தகு குணவாயிலின் சைவச்சூழலைப் பெரிய புராணத்தில் சேக்கிழார் சிறப்பாகக் கூறுகிறார். ஆக அஞ்சைக்களமே வாஞ்சைமிகு அன்புக் குணவாயில் என்பதாக இளங்கோவடிகள் காலத்தில் சைவப் பெயராய் இருந்திருத்தல் வேண்டும் எனலாம். ஏனெனில் இக்குணவாயிலான அஞ்சைக்களத்திற்கு அருகில் உள்ள கொடுங்கோளூரை ஆண்ட செங்கோற்பொறையன் சிவபக்தியின் மேலீட்டால் துறவு பூண்டதாய்ச் சேக்கிழார் கூறுவதால் அஞ்சைக்களமாம் குணவாயிலை ஒட்டிய சேரநாட்டின் கீழ்த்திசை எல்லையானது சமண சமயத் தொடர்புடையதாக இருந்ததில்லை என்பதால் குணவாயிலின், சூழலைச் சைவச் சூழலாய்க் கருதலாம்.

மேலும் சேரர்கள் முழுமையான சைவப்பற்றாளர்களே என்பதாலும் குணவாயில் கோட்டம் சைவக் கோட்டமே என்பதாலும் உறுதியாக நம்பலாம், இளங்கோவடிகள் சைவராகப் போற்றப்படத்தக்கவர் என்பதற்கு அவர் சிவனைப் பிறவா யாக்கைப் பெரியோன் எனக்குறித்த ஒன்றே தக்க சான்றாகும். சைவத்தில் ஊறிய ஒருவரே இங்ஙனம் கூறமுடியும். பிற சமயத்தவராயின் சமயப் பொதுமையைப் பின்பற்றுவார் என்பதே பேருண்மையாதலால்தான் இளங்கோவடிகள் சைவ – வைணவ, சமண சமயங்களை ஏற்றத் தாழ்வின்றி நடுநிலையோடு பாடியுள்ளார். இக்கருத்தினைச் சாத்தனாரைக் கொண்டே உறுதிப்படுத்தலாம்.

சாத்தனார் பௌத்த சமயத்தவர் என்பதால் சமயக் கணக்கர் பலரைச் சந்திக்கும் மணிமேகலை, தான் நாட்டித்தனாது நிறுத்தல் என பௌத்தத்தையே உயர்த்தினாரேயன்றி இளங்கோவடிகளைப் போலப் பொதுமை காணதவராகவே காப்பியத்தைப் படைத்துள்ளார் என்பதால் இளங்கோவுக்கும் சாத்தனாருக்குமான வேறுபாடு தெரியும் நிலையில் இளங்கோவுக்கும் சாத்தனாருக்குமான வேறுபாடு தெரியும் நிலையில் இளங்கோவின் ஆன்மா - சைவம் சார்ந்தது என்று கூறலாம். இந்த அடிப்படையில்தான் அவரது பெயரும் முருகனுக்குரிய பெயராக இளம்பூரணன் என்றதே இளங்கோ எனப்பட்டதென்க!

ஆக இத்தகு நிலைகளை எல்லாம் கண்டு உணரும்போதுதான் "புலந்தொகுத்தோனே போக்கறுபனுவல்" எனத் தொல்காப்பியப்பாயிரம் புலந்தொகுத்ததைத் தொல்காப்பியருக்குப் பொருத்திக் காட்டியவாறாய் ஈண்டு இளங்கோவடிகளும் புலந்தொகுத்தோராவார் எனலாம்.

இந்த அடிப்படையில் புலன் என்னும் வனப்பின் இலக்கியச் சான்றாகப் புலன் உணர்ந்தோராகிய இளங்கோவடிகள் சிலப்பதிகாரத்தை யாத்தார் எனலாம். ஆக தொல்காப்பியப் புலன் வனப்பே இளங்கோவடிகளின் சிலப்பதிகாரம் என்பதால் சைவப் பின்னணியைக் கொண்ட குணவாயில் என்னும் சிலம்பின் செஞ்சொல், தொல்காப்பியப் பதிவாகியுள்ளதால், பனம்பாரனார் பாடிய சிறப்புப் பாயிரத்தில் காணும் "தொல்காப்பியன் எனத் தன் பெயரை"த் தனது நூலுக்கு வைத்ததான சிறப்பால் இளங்கோவடிகளைக் குணவாயில் கோட்டத்துக் குணசீலர் எனக்கூறச் செய்கிறது எனலாம்.

பாராட்டு

குன்றக்குடி தருமைக் கயிலைக் குருமணி மேல்நிலைப் பள்ளியில் படித்து 2020 - 2021 " நீட்" தேர்வில் வெற்றி பெற்ற பள்ளியின் முதல் மாணவி கனிமொழிக்கு (த/பெ. பிச்சை, நேமத்தான்பட்டிபழையூர்) குருமகாசந்நிதானம் அவர்கள் பாராட்டு தெரிவித்தார்கள். இதற்காக சிறப்பு வகுப்புகள் நடத்தி, உற்சாகப்படுத்தும் உயிரியல் பாட ஆசிரியர் திரு. பிரபாகரன் அவர்களுக்கு நன்றி.

– ஆசிரியர்

சிறந்தோர் யார்?

(கவிவேந்தர். வேழவேந்தன்)

கொசுவொன்றும் தேனீயும் நட்பாய் அன்று
கோலமிகு சோலையிலே உலவும் போது
விசையோடு வேலைசெயும் உழவன் தன்னை
வேதனையால் துடிக்கவைப்பேன் பார்,பார்! என்றே
கொசுஅவனின் மேனியெங்கும் போய்க் கடிக்க
குளிர்சுரத்தில் அவன் வீழ்ந்தான்; துடிது டித்தான்!
பிசிகில்லா அவ்வுழவன் காய்ச்சல் போக்கப்
பெரியதொரு மருத்துவரைத் தேடிப் போனான்!

மருத்துவரும் பாட்டாளி உழவன் தன்னை
வரவேற்றார்; உடல்முழுதும் பரிசோதித்தார்.
பொருத்தமுடன் தேன்கலந்த மருந்தைத் தந்து
புயம்நிறைக்கும் உழவனவன் காய்ச்சல் நீக்கக்
கருத்துடனே செயல்பட்டார்; உழவன் மீண்டான்.
கழனிக்குத் திரும்பியவன் வழக்கம்போலத்
திருத்தமுடன் தன்தொழிலைத் தொடர்தல் கண்டு
தேனீயும் கொசுவினையே தேடிற் றாங்கே!

இரண்டுமங்கே சந்தித்த போதில் தேனீ,
"இரக்கமின்றி உழவனைநீ கடித்தாய்; பாய்மேல்
புரண்டழவே வதைசெய்தாய்! நானோ அன்னோன்
பூரிக்க மருந்தளித்தேன்; பிழைக்க வைத்தேன்!
திரண்டநெடுந் தோள்களுடன் அவனோ மீண்டும்
திரும்பிவிட்டான் வயலுக்கே! மண்ணின்மீதில்
இரண்டுவகை உயிர்களிலே சிறந்த தாராம்"
இதைக்கேட்ட கொசுவெட்கிப் பறந்த தாங்கே!

தேவார மாண்பும் ஓதுவார் மரபும்

(தருமையாதீனப் புலவர். தா. குருசாமி தேசிகர்)

பதினான்காம் நூற்றாண்டு என்பது தமிழகத்தின் வரலாற்றில் ஒரு சோதனையன காலகட்டமாகும். தில்லி சுல்தானினின் தளபதிகளான "மாலிக்காபூர்" என்பான் கி.பி.1311லும், குருஸ்கோன் என்பான் 1318லும் தமிழகக் கோயில்களை இடித்தும், பாழ்படுத்தியும் பெரும் செல்வங்களைக் கொள்ளையடித்தும் சென்றனர். அதன்பிறகு 1328இல் தில்லியிலிருந்து வந்த, "ஆதிசுல்தான்", "மதுபக்நேமி" எனும் இருவர் மதுரை நகரைக் கைப்பற்றி, மதுரை சுல்தான்களின் ஆட்சியை, அங்கு நிறுவினர். இவர்களை எதிர்த்த "வீரவல்லாளன்" எனும் போசள மன்னனைக் கொன்று அவனது உடலில், வைக்கோலைத் திணித்து, மதுரை நகர் வர்சலில் தொங்கவிட்டனர். இவர்களது கொடுமையான ஆட்சி கி.பி. 1371இல் விஜயநகர அரசன் "வீரகம்பணன்" மதுரையைக் கைப்பற்றும் வரை, நீடித்தது. மாலிக்காபூர், குஸ்ருகான், ஆகிய இருபடை எடுப்புகளாலும், மதுரை சுல்தான்களின் ஆட்சியிலும் பெரும்பாலான கோயில்கள் அழிந்தன. பூசைகள் நின்றுபோயின; தேவாரம்பாடுவதும் அரம்பையர் ஆலயங்களில் ஆடுவதும் நின்றுபோயின; வீரகம்பணனின் எழுச்சிக்குப் பிறகே மீண்டும் அக்கலைகள் புத்துயிர் பெற்றன. ஏறத்தாழ 80 ஆண்டுகளுக்கும் மேலாக, கோயில்கள் முடங்கியதால் தேவாரம் பாடும் மரபும் முடங்கியது. பின்வந்த விஜயநகரப் பேரரசர்கள் கோயில்களையும், கோயில் சார்ந்த கலைகளையும் புத்துயிர் பெறச் செய்தனர்.

திருமலைமன்னர் ஓதுவார்க்கு கொடுத்த செப்புப் பட்டயம் மூலம் இதனை அறியலாம்" என்று குடவாயில் பாலசுப்பிரமணியனார் எழுதிய "தேவாரமாண்பும்" தேவாரம் வளர்ந்த நிறைகுறைகளே விவரித்துள்ளார். தொல்லியல் துறையில் வல்லுநரான முதுமுனைவர் குடவாயிலார் "தருமையாதீனம் விருது" "உவேசா விருது" முதலியன பெற்ற பேரறிஞர்; திருக்கோயிற் கலைச்செல்வர்; பல ஆண்டுகள் கோயில்களின் கல்வெட்டுகள், பட்டயங்கள், ஓலைச்சுவடிகளையும் ஆய்ந்தபோது, தேவாரமாண்பினையும், ஓதுவார் மரபு வரலாற்றினையும் தன்னால் உணரமுடிந்தது; அதன்பதிவே "இந்நூல்" என்று அடையாளம் காட்டி மகிழ்ந்தாலும், இதற்கு விளக்கம் தந்தவர்கள் சேக்கிழார் - அடிப்பொடி

தி.ந.இராமச்சந்திரனார், தமிழ்ப்பல்கலைக்கழகம் முன்னாள் பதிவாளர் இரா. சுப்பராயலு, தன்துணைவியார் கண்ணம்மா மூவரையும், நினைவுகூர்ந்து நன்றி கூர்வார்.

தேவார மூவர் வரலாறும், தெய்வத்தமிழ்ப் பதிகங்களும் என்ற தலைப்பில், எழுதியுள்ள செய்திகளில் வரலாறோடு பதிகங்கள் பாடிய சந்தர்ப்பங்களையும் தொகுத்திருப்பது கடும் உழைப்பாகும். யாழ்முரிப்பதிக விளக்கம் சேக்கிழார் அருளிய செய்திகளை விடாமல் எழுதியிருப்பது, பாராட்டத்தக்கதாகும். "அளவுபடா இசைப்பெருமையை யாழ் மூலம் முழுதும் அறியமுடியா" இந்த யாழினைப் கொண்டே இறைவர் திருப்பதிகங்களை வாசிக்க வேண்டும்; இயைந்தவாறே வாசிப்பீர்" என்று சம்பந்தர் அருளியதைப் பதிவு செய்திருப்பதும் காரைக்குடி அழகப்பா பல்கலையில் இதுபற்றி ஆய்வுசெய்த "இசைத்தமிழ் வித்தகர்" பி.டி.ஆர்.கமலைத்தியாகராசர், "இசைத்தமிழின் உண்மை வரலாறு" எழுதி முனைவர் பட்டம் பெற்றதையும் அந்நூலில் "யாழில் கமகம் வாசித்தல் இயலாததால் யாழ் மறைந்துவிட்டது" என்ற உண்மையையும், விரிவாக அடிக்குறிப்பில் பதிவு செய்திருப்பதும் தமிழிற்கு அரிய நன்கொடையாகும். வரலாறு கூறும் கட்டுரையில், திருப்பாசுரம் பற்றி எழுதும் போது, இந்த ஒரு பதிகத்திற்கு மட்டும், சேக்கிழார் பெருமான் இருபத்தாறு பாடல் மூலம் விளக்கம் நல்கியது நமது பெருந்தவப்பயனாம் என்று, சேக்கிழார் கூறிய பாடலையும் எழுதியிருப்பது, வரலாற்றுச் செய்தியானாலும், குடவாயிலார் பத்திமைப் பண்பும் வெளிப்படும். அப்பாடல் -

"வெறியார் பொழிறசண்பை வேந்தர்மெய்ப் பாசுரத்தைக்
குறஅறிய எல்லை அறிந்து கும்பிட்டேன் அல்லன்
சிரியேன் அறிவுக் கவர்ந்தந்திருப்பாதந் தந்த
நெறியே சிறிதுயான் அறிநீர்மைகும்பிட்டேன் அன்பால்"

என்ற சேக்கிழார் பாடலை அடையாளங்காட்டியதோடு, "ஏடகப் பெருமான்மீது பாடப்பெற்ற பாடல் ஞானசம்பந்தப் பெருமான் அங்கு செல்லாமலே, மதுரையில் வைகைக் கரையினில் நின்றவாறே பாடப்பெற்ற சிறப்புடையதாகும்" என்று எழுதியிருப்பது சிறப்புமிக்க ஆய்வாகும். சம்பந்தப்பெருமானின் கரம்பற்றி மணந்த பெண்ணின் நல்லார் பெயர் "சொக்கி" என ஒரு கல்வெட்டுக் கூறுகிறது என்று எழுதியிருப்பது சைவ உலகம் அறிதற்குரிய அரிய செய்தியாகும். கோயில்களில் பணிசெய்யும் பூசகர்களும், ஓதுவாமூர்த்திகளும்

தெரியவேண்டிய செய்தியாகும். மரபு மீறாமல் நாவரசர் வரலாறு நினைவூட்டுவது நல்ல ஆய்வு ஆகும்.

"தவமென்று பாயிடுக்கித் தலைபறித்து நின்றுண்ணும்
அவமொன்று நெறிவீழ்வான் வீழாமே அருளும்எனச்
சிவமொன்று நெறிநின்ற திலகவதியார் பரவப்
பவமொன்றும் வினைதீர்ப்பார் திருவுள்ளம் பற்றுவார்"

என்று நாவரசர் தமக்கையார் திலகவதியார் வேண்டுவதை உடைய பாட்டையே பதிவு செய்யும் புதுமை பாராட்டத்தக்கது. திங்களூரில் அப்பூதி அடிகள் மகனை உயிர்ப்பித்தது வீதியில் என்றும், திரமருகலில் வணிகனைப் பிழைக்கச் செய்ததும் அப்பர் சம்பந்தரின் அற்புதச் செயல்களைக் கண்டுபிடித்துப் பதிவு செய்திருப்பது தேவாரமாண்பின் உச்சமாகும். அப்பரின் தேவார மாண்பை நன்கறிந்து பதிவு செய்யும் குடவாயிலார் "யாதும் சுவடுபடாமல் ஐயாறு அடைகின்றபோது" என்று ஐயாற்றுப்பதிக நுட்பத்தை, பிறர் கண்களால் பார்க்க முடியாததுமான, பிரணவ சரீரத்தைப் பெற்றார் அப்பர் என்பார். அதனால்தான் அப்பரைக் காணத் திருப்பூந்துருத்திக்குப் பல்லக்கில் திருஞானசம்பந்தர் அமர்ந்தவாறு சென்றபோது, யாரும் அறியாவண்ணம் அந்தப் பல்லக்கை நாவரசர் தோள்கொடுத்துத் தூக்கிவரமுடிந்தது என்றும் குறிப்பிடுவார் என்றும் எனவே "பிரணவ சரீரம்" பெற்ற அப்பரடிகள் முதலில் பாடிப் பரவிய தலம் திருவையாறு என்று குறிப்பிடும் செய்திகள் இதுவரை பெரியபுராண உரைகண்ட C.K.S. தருமையாதீனம் தந்த உரையினிலோ தெரியாத செய்தியாகும்.

அப்பர் பெருமான் புகலூரில் கயிலை செல்ல நினைந்தபோதும் பெற்றிருந்தது "பிரணவ சரீரம்" என்று குறிப்பிடும் செய்தியும் அறிஞர் உலகம் அறிதற்குரிய செய்தியாகும். இறுதியிலே சம்பந்தர் அப்பர் புகைப்படங்களையும் பதிவு செய்திருப்பது போற்றத்தக்கது. "பிரணவசரீரம்" என்று கூறியதை தமிழறிஞர்கள் உணரவேண்டும்.

சுந்தரரின் பதிகமாண்பையும் வரலாற்றையும் அருமையாகப் பதிவு செய்திருப்பது ஆய்வாளர்கட்குப் பெரும் விருந்தாகும். முதல் நூல் திருத்தொண்டத்தொகை, வழிநூல் நம்பியாண்டார் நம்பி பாடிய தொண்ணூறு திருத்தொண்டர் திருவந்தாதி என்று பெயர் கொடுத்து திருவந்தாதியை விளக்கம் செய்திருப்பது ஒழுங்கின் உச்சமாகும்.

கயிலை மாமலைத் தாழ்வரையில், உபமன்னிய முனிநடுவிருக்க முன்புங்கவர்கள் சூழ்ந்திருந்தனர்; அப்போது சூரியஒளி ஆயிரம் எழுந்ததுபோலப் பேரொளி தோன்றிட, இதுஎன்ன அதிசயம் எனத் தவமுனிவர்களும் வணங்க, உபமன்னிய முனிவர் அந்த ஒளிவந்த திசையை வணங்கி, முனிபுங்கவர்கள் ஐயத்தைச் சுந்தரரின் வரலாறு மூலமாகப் போக்கியதைப் பெரியபுராணம் சொல்வதை யாரும் குறிப்பிடாததை முறைப்படி சொன்னவர் குடவாயிலார்தான். "நாவல் ஆதிசைவன் ஆரூரன்" என்று சுந்தரரைக் குறிப்பிடுவது தன் தந்தையாரைத் தந்த தந்தையார் என்றும், அதனால்தான் பெயரன் அப்பெயரினைப் பெற்றிருந்தான் என்றும், செய்கை என்பது செயலினையும், இருமையால் என்பது மனத்தாலும் உடலாலும் (காயம்) மாறுபாடு இன்றி என்றும் "ஆவண ஓலைப்பாட்டிற்கு விளக்கம் நல்கும், நூலாசிரியர் நுண்மாண்பினே பக்கந்தோறும் படிக்கப் படிக்க வரலாறோடு தமிழ்ப்புலமையும் நமக்குவரும் அரிய செய்தி.

"பொந்தில் ஆந்தைகள் பாட்டாறபுனவாயலே" என்றசுந்தரின "தேவார மாண்பு" விரிவாக விளக்கம் செய்யப்படுவது போற்றத்தக்கது. மேலும் சுந்தரர் திருப்புகலூர் சென்றபோது முதலில் பாடிய பதிகம் சேக்கிழார் குறிப்பிடும் இசைப்பதிகம், நமக்குக் கிடைக்காத மறைந்த பதிகங்களில் ஒன்று என்றும், திருப்புகலூரில் நிகழ்ந்த அற்புதத்தைச் சேக்கிழார் பெருமான் கூறும்போது "செங்கல்" என்ற சொல்லாட்சியைப் பயன்படுத்தவில்லை. அவர் காலத்தில் செங்கல் என்ற சொல் காவிக் கல்லையும், இரத்தினக் கல்லையும் குறிப்பிடுவதாகும்.

ஆண்டாள்தம் பாசுரம் ஒன்றில் செங்கல் கூறை என்று காவி ஆடை குறிப்பிட்டுள்ளதை நோக்குதல் வேண்டும். சேக்கிழார் பெருமான் நாம் இன்று செங்கல் என்று குறிப்பிடும் பொருளைச் "சுடுமட்பலகை" என்றும், வேளமண்கல் என்றும் இட்டிகை என்றும் மூன்று சொற்களால் சுட்டியுள்ளமை சுவை பயப்பதாகும். பொதுவாக இன்று ஆந்தை அலறுவதாக இலக்கியங்களில் குறிப்பிடுகின்றனர். ஆனால் சம்பந்தர் சுந்தரர் போன்றவர்கள், ஆந்தை பாடுவதாகச் சுட்டியிருப்பது அருள்நோக்கே ஆகும். வடபுலத்தில் திருமகளின் வாகனமாக "ஆந்தை" இன்றும் போற்றப்பெறுவதோடு, அதன் ஒலி மங்கல ஓசையாக மதிக்கப்பெறுகிறது. இதற்கு திருஞானசம்பந்தரின் "திருப்புள்ள மங்கை" பதிகத்தில் வரும் "பொந்தின் அடை ஆந்தைகள் பலபாடும் புளமங்கை" என்ற பதிகவரிகொண்டு "பொந்தில் ஆந்தைகள் பாடுகின்ற புகலூரினைப் பாடுமின் புலவீர்காள்" என்ற சுந்தரர் எட்டாவது

பாண்டியநாட்டு ஆற்றூரில் வைக்கப்பெற்ற சம்பந்தரின் தேவார பாடல்களும் செப்பேட்டில் எழுதப்பெற்றவை, கல்வெட்டு மூலம் அறியப்பட்டவை இன்று நமக்குக் கிடைக்கவில்லை. அச்செப்பேடுகள் திருவாரூர்க் கோயிலில் கிடைக்கவும் வாய்ப்பு உள்ளது என்றும், ஆனந்தேஸ்வரம் கோயில் பகுதியில் இரகசிய அறையிலும், தியாகேசர் கருவறையிலும் மறைந்துள்ள இரகசிய அறையிலும் நிச்சயம் தில்லை, ஆரூர் கோயில்களுக்கு உரிய அரும்பொருள்களும், தெய்வத் திருமேனிகளும், மூவர் தேவாரச் செப்பேடுகள் கிடைக்க வாய்ப்பு இருக்கலாம் என்று, திருப்பதியில் இப்படித் திறந்து பார்த்தே அன்னமய்யாவின் "கிருதிகள்" எழுதப்பெற்ற பலசெப்பேடுகள் எடுத்ததை கருத்திற்கொண்டு திருவாரூரிலும் இதனைத் திறந்துபார்க்க வேண்டி தமிழக அரசை வேண்டும் இவரது நிபுணத்துவத்தை அரசு அங்கீகரிக்க வேண்டும். குடவாயிலார் கடும் உழைப்போடு "ஓதுவார் மரபு" பற்றி எழுதியுள்ள திருமலை மன்னர் செப்புப் பட்டயமும் இராசராசன் அமைத்த 40 ஓதுவார்களும், தாராசுரம் கோயில் சுவரில் 108 ஓதுவார்களுக்கும் உரிய கற்சிற்பங்களும், ஓதுவார்பணிகள் பற்றிய கல்வெட்டு தொகுப்புகளும், பக்கவாத்தியங்கள் பற்றிய கல்வெட்டு ஆய்வுகளும் தனியாக ஆய்விற்கு உரியன. அவரது பணி வாழ்க என்று வணங்குவதே அடியேனின் எளிய செயலாகும்.

மழை

கவிஞர். பரணி
(சுமைதாங்கி பரசு. இராமமூர்த்தி)



வானவேடவன் வைய மான்மேல்
விரைந்து கொடுத்த வில் அம்புகள்

உழைக்கும் உழவனின் நிலத்தில்
உரமாய் விழும் நெல்விதை முத்துக்கள்

கத்துக் கடலின், கதிரொளியில்
கருமேக புத்தொளியில்

கடல்வாழ உயிரினங்கள்
களிப்புடன் வாழ விழும் துளிகள்

மனித இனம் மாண்புடன் வாழ
மழைத்துளிகள் மண்ணில் வாழட்டும்!

தமிழைச் சீராட்டும் அம்மை

(துஷ்யந்த் சரவணராஜ்)



காவி யுடுத்திவந்த கருணை - உமைக்
கண்டு வணங்குமந்த அருணை - தமிழ்
மேவி வளருகின்ற சோலை - நீர்
மேன்மை பிழிந்துதரும் ஆலை!

சட்டை அணியாத மேனி - நீற்றுச்
சட்டை அணிகின்ற ஞானி - நீர்
கொட்டத் தெரியாத தேனீ - துயர்
களைந்து கரைசேர்க்கும் தோணி!

பட்டுப்போன்ற மென்மை உள்ளம் - புவி
பார்த்துப் பேரின்பம் கொள்ளும் - தமிழ்
கட்டுக் கடங்காத வெள்ளம் - நீர்
கொட்டி முடிக்கமனம் துள்ளும்!

அன்புச் சுடர்தாங்கும் விளக்கு - எங்கள்
அகத்தின் இருள்போக்கும் கிழக்கு - ஒரு
சின்னஞ் சிறிதான உழக்கு - கடற்
சிறப்பை யளப்பதுவோ வழக்கு?

வீழ்ந்து பணிகின்றேன் தமிழே - யான்
விரையும் நதியோரக் குமிழே - தலை
தாழ்ந்து பணிகின்றேன் உம்மை - நீர்
தமிழைச் சீராட்டும் அம்மை.

கல்வியே அழியாச் செல்வம்

(கவிஞர். கா. கருப்பையா BA.,)

"எண்ணும் எழுத்தும் கண் எனத் தகும்"

"எண்ணென்ப ஏனை எழுத்தென்ப இவ்விரண்டும்
கண்ணென்ப வாழும் உயிர்க்கு"

இந்த உலகத்தில் வாழுகின்ற மக்களுக்கு எண்ணும் எழுத்தும் இரண்டு கண்களைப் போல என்று திருக்குறளில் கல்வி அதிகாரத்தில் திருவள்ளுவர் கூறியிருப்பது கல்வியின முக்கியத்துவத்தை இந்த உலகத்திற்கு எடுத்துச் சொல்வதற்குத் தான். ஒரு பிறப்பில் படித்த படிப்பு ஒருவருக்கு ஏழு பிறப்பிலும் வந்து சேரும். படித்தவர்கள் என்றும் மேலோங்கியே இருப்பார்கள்.

"ஒருமைக்கண் தான் கற்றகல்வி ஒருவற்கு
எழுமையும் ஏமாப்புடைத்து"

இந்த நாட்டில் அனைவருக்கும் கல்வி கொடுக்க வேண்டும் என்பதற்காகத்தான் மத்திய, மாநில அரசுகள், பள்ளிகளையும், கல்லூரிகளையும் அதிகமாக உருவாக்கி, சிறப்பான பாடத்திட்டங்களை தயார் செய்து, வருங்கால இளைய சமுதாயம் வளர்ச்சி பெற வழிவகை கண்டு வருகின்றன.

அதே போல நாடு முழுவதும் நூலகங்களை உருவாக்கி, மணற்கேணியைத் தோண்டத் தோண்ட நீர் ஊறுவதைப் போல நூல்களைக் கற்றுக் கற்க மக்களுக்கு அறிவு ஊறும் வழியை ஏற்படுத்தி வருகிறோம். கல்விச் செல்வமே அழியாத சிறந்த செல்வம். மற்ற செல்வங்களெல்லாம் செல்வங்கள் அல்ல.

"கேடில் விழுச்செல்வம் கல்வி ஒருவற்
மாடல்ல மற்றையவை"

எனவே, இன்றைய சூழலில் கிராம நகர்ப்புறங்களில் வாழுகின்ற கீழ்தர, நடுத்தர மக்கள் கல்வியின் அவசியத்தை சிறப்பை உணர்ந்து கற்கத்தக்க நூல்களை தெளிவாகக் கற்று, கற்றபின் வாழ்க்கையில் நடந்து காட்ட வேண்டியது கடமை. உலகின் எதிர்பார்ப்பும் கூட.

"கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக"

பள்ளி சென்று படிக்க முடியாத ஏழைகட்கு அரசு இலவசக் கல்வி வழங்குகிறது. அவர்களில் ஏழ்மை நிலையைக் கருத்தில் கொண்டு அவர்கட்கு உதவிடும் வகையில் பல்வேறு கல்விச் சலுகைகளை மாநில அரசு செய்து வருகிறது. பொதுநல விரும்பிகளும் உதவுகின்றனர்.

"குஞ்சியழகுங் கொடுத்தானைக் கோட்டழகும்
மஞ்சள் அழகும் அழகல்ல - நெஞ்சத்து
நல்லம் யாமென்னும் நடுவு நிலைமையாற்
கல்வியழகே அழகு"

என்னும் நாலடியாரின் நற்பாடல் நமக்கு வழிகாட்டுகிறது.

கல்விச் செல்வத்தைக் காக்க கிராமந்தோறும் நூலகங்கள் உருவாக்கப்பட வேண்டும். அந்த நூலகங்கட்கு மக்கள் சென்று படித்து வர வாய்ப்பு வசதிகளை ஏற்படுத்தித் தரவேண்டும். கல்தோன்றி மண் தோன்றாக் காலத்திலிருந்து இன்றைய வரை ஏற்பட்டுள்ள சமுதாய முன்னேற்றங்கள், வாழ்க்கை நடைமுறைகள் அதில் முதியவர்களின் பங்கு, இளைஞர்களின் பங்கு ஆகியவற்றை கணக்கிட்டுப் பார்க்க வேண்டும். அடக்கமுடனும், அன்புடனும், ஆர்வமுடனும், தன் முயற்சியுடனும், பாராட்டுக்குரிய பண்புடனும், மக்கள் வாழ்ந்து வந்த நிலைகளை இன்றைய இளைய சமுதாயம் உணர்ந்து செயல்படவேண்டும்.

"அன்பகத்தில்லா உயிர் வாழ்க்கை வன்பாற்கண்
வற்றல் மரந்தளிர்த் தற்று"

பாலை நிலத்தில் பட்டமரம் தளிர்க்காது. அதுபோல நெஞ்சில் அன்பில்லாது வாழமுடியுமா? பணிவும் இன்சொல்லுமே உயிரணிகள்.

"பணிவுடையவன் இன்சொலன் ஆதல் ஒருவற்கு
அணி அல்ல மற்றுப்பிற"

ஒருவன் வீரனாக வாழவேண்டுமானால் அடக்கம் தேவை. அடங்காமை அவனை பேதையாக்கும்.

"அடக்கம் அமரருள் உய்க்கும் அடங்காமை
ஆரிருள் உய்த்து விடும்"

தரத்திலே குறையாது அடங்கியவன் தோற்றம் மலையைவிட உயர்ந்தது.

"நிலையில் திரியாது அடங்கியான் தோற்றம்
மலையினும் மாணப் பெரிது"

கல்விச் செல்வம் காலத்தால் அழியாது - கண்களை விழிப்படையச் செய்யும். பார்ப்பவர்கள் மனப்படி பார்த்தால் அவர்கள் பக்குவத்துக்குத்

தகுந்தபடி சில பொருட்கள் ஞானத்தைக் கொடுக்கும். சில சிந்தனையைக் கொடுக்கும். அறிவியலில் இது சாத்தியமானதாகும்.

உலக நடைமுறையில், இல்லற வாழ்வில் ஒரு சமுதாயம் உண்மையிலேயே உயர்வடைய வேண்டுமானால், மக்களிடையே நல்ல கல்வியறிவு தேவை.

"கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே"

என்ற ஆன்றோர் வார்த்தையில் ஆயிரம் அர்த்தங்கள் உண்டு. அந்தக் கல்வியை மக்கள் மனதில் சங்க இலக்கியங்கள், சரித்திர நாவல்கள், இலக்கண இலக்கிய நூல்கள் மூலம் நன்கு பதியவைக்கவேண்டும். ஒரு மனிதனது வாழ்க்கையில் எவ்வளவு செல்வங்கள் இருந்தாலும் அழியாத செல்வம் – கல்வியே!

கற்போம் – கற்பிப்போம் – காலத்தை வெல்வோம்.

கொரோனோ என்னும் தொற்றின் கோர தாண்டவம்!

(மரு. பரமகுரு)

கொரோனா என்னுமொரு கொடியதொற் றுலகில்
கோர தாண்டவம் புரிகிறது!
கோடிக் கணக்கில் மக்கள் உயிரை வாரியுண்டு
குவலயத் தை ஆட்டித் திரிகிறது!
பாரில் உள்ளஎல்லா நாட்டு மக்களையும்
பயத்தில் ஆழ்த்திக் கொக் கரிக்கிறது!
பற்பல நாட்டரசும் எடுக்கும் முயற்சிகளைப்
பஞ்சாய்ப் பறக்கவிட்டுப் பழிக்கிறது
கூரிய மருத்துவப் பேரறிஞர் தடுப்பு
மருந்துகள் கண்டு கொடுத்தபின்னும்
கொட்டம் அடங்காமல் மேலும் மேலும் அது
கொடிய தாகம்எடுத் தலைகிறது!
யாரைச் சரண்புகுவ தென்னும் தெரியவில்லை;
இந்த உலகைக் காக்க இயலாதோ?
எல்லா உலகினையும் இயக்கும் இறைவனையே
ஏத்திப் புகலடைவ தன்றி யாது செய்வோம்!

கலையும் வாழ்வும்

(தவத்திரு குன்றக்குடி அடிகளார்)

தொழிலாளர்கள் கட்டுக்கோப்புடன் ஒற்றுமையாக ஒரு குலமாக வாழ்ந்து, கல்விச் செல்வத்தையும் பொருட் செல்வத்தையும் பெற்று, சிறப்புடன் திகழ்ந்து கவலையற்ற, நேர்மையும் செம்மையும் நிரம்பிய நிலையுடன், குடி கெடுக்கும் செயல்களைத் தள்ளித் திறமை கொண்ட தீமையற்ற தொழில் புரிந்து யாவரும் தேர்ந்த கல்வி ஞானம் எய்தி வாழ வேண்டும்.

கலைகள் கருத்தைக் கவர்வன; களிப்பைத் தருவன. கருத்தற்ற கலைப்படைப்புக்கள் கால வெள்ளத்தை எதிர்த்து நீந்தி நின்று வாழ இயலாதவை. கருத்து, கற்றறிந்தோர் உள்ளத்திலே தேங்கி நின்று தேசிய உணர்ச்சிக்கும் சமுதாய உயர்வுக்கும் உதவக்கூடியது. காலத்தால் மூத்த நமது இனம் கருத்திலே நாட்டம் கொண்டதாலேதான் கருத்தரங்கங்களில் ஏறிநின்று ஏற்றம் பெற்றது. கருத்து வழிவாழ்வு வாழ்ந்து மகிழ்ந்தது; கருத்துக்களிலே நல்லனவும் தீயனவும் உண்டு. கருத்து என்ற பேரில் உண்டாகும் எல்லாமே வாழ்வுக்கு உகந்தனவாக இருந்ததில்லை - இருப்பதுமில்லை - இருக்கவும் முடியாது.

இயல், இசை, நாடகம் போன்ற கலைகள் தமிழனைப் பொறுத்தமட்டில் மகிழ்வு ஊட்டியதோடு - வாழ்வையும் காட்டின. "வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும் தெய்வத்துள் வைக்கப்படும்" என்ற உண்மையைத் தமிழர்களின் கலைகள் எடுத்தியம்பின. இதனாலே கலைவழிக் கலாச்சாரம் முகிழ்த்து, அன்பும், அறனும், பண்பும், பணிவும் மலர்ந்தன. கருத்து வழிப்பட்ட வாழ்வு அரும்பி மலர்ந்து மணம் வீசக் கலைகள் பயன்பட வேண்டும். இசை, நாடகம் போன்றவற்றை அழகுக் கலைகள் என்கிறோம். அழகுக் கலைகள் ஆழ்ந்தகன்ற நுண்ணறிவையும் ஆக்க வேண்டும். இறந்த காலத்தைப் பற்றிய அறிவையும் நிகழ்காலத்தையொட்டிய கருத்தையும் வருங்காலத்தைப் பற்றி திட்டத்தையும் தமிழ்க் கலைகள் எடுத்துச் சொல்ல வேண்டும். கல்லூரிகளிலே கற்கும் சிறார்களின் நற்சிந்தனைக்கும் நல்ல முன்னேற்றத்திற்கும் கல்லூரி விழாக்களில் இடம் பெறும் கலை நிகழ்ச்சிகள் உதவவேண்டும். பருவம் அறிந்து பக்குவம் தெரிந்து கலைநிகழ்ச்சிகள் மூலம் நற்கருத்துக்களைத் தூவிவிட வேண்டும். இன்றைய நிலையிலே பள்ளிகளின் மூலமாக போதிக்க முடியாத

நற்கருத்துக்களை மாணவர்க்குக் கலைகளின் வழியே போதித்து விடலாம். இப்போது கலைகளை அனுபவித்துப் போற்றும் சூழ்நிலை இளைஞர்களிடத்திலே உருவாகியுள்ளது. இந்த நல்ல நிலையைப் பயன்படுத்தி நயத்தக்க கருத்துக்களைக் கலைகள் மூலம் கற்பிக்க வேண்டும்.

"கற்றிலனாயினும் கேட்க" என்றார் வள்ளுவர். அதைப் போல் "படிப்பிலனாயினும் பார்க்க" எனலாம். இளைஞர்கள் நடிப்பு, நடனம் போன்றவைகளைப் பார்த்து அனுபவிக்க விரும்புவதுபோல் வைக அவைகளினூடாக வரும் கருத்துக்களையும் கேட்க வேண்டும். கேள்வியறிவு பேரறிவைத் தரவல்லது. பார்த்துப் பெறுமனுபவங்கள் பாரிற் சிறக்க வழி செய்யும்; புத்தகத்தையே தொடாத – படிக்காத சில பாமர மக்கள் கேள்வியறிவினாலும் வாழ்க்கையனுபவத்தாலும் உயர்வதைப் பார்க்கிறோம். கல்வியாற் பெற்ற உண்மைகளோடு காட்சியாலும் கேள்விகளாலும் பெறும் கருத்துக்களும் உலகியல் வாழ்க்கைக்கு உறுதுணையாய் நின்று உதவக் கூடியன; கலைகள் காட்டும் கருத்துக்களிலே கழிப்பதைக் கழித்துக் கொள்வதை கொள்வதைக் கொள்ள வேண்டும். உலகப் பெரியார் சொன்னதைப்போல் குணம் நாடிக் குற்றம் களைய வேண்டும். வாழ்வுக்குப் பயன் அளிக்காத, வாழ்வையே அழிக்கக்கூடிய சில கருத்துக்கள் சுவையுடன் வெளிப்படுத்தப்படுவதால் இளைஞர்களை அவை ஈர்த்து விடுகின்றன. கள்ளமோ, களங்கமோ இல்லாத வெள்ளை உள்ளங்கள் அக்கருத்து வழிச்சென்று வாழ்வின் பயனை அனுபவிக்காது அல்லலுறுகின்றன. பிஞ்சு நெஞ்சங்களை நற்கருத்துக்கள் பிணிக்க வேண்டும். பிறப்பொக்கும் எல்லாவுயிர்க்கும் – ஈதல் இசைபட வாழ்தல், இன்னா செய்தார்க்கும் நன்னயம் செய்தல், காலத்தினால் செய்யும் உதவி – அன்புக்கும் உண்டோ அடைக்கும் தாழ்? அறனெனப்பட்டதே வாழ்வு – ஒன்றே குலமும் ஒருவனே தேவனும் போன்ற வேண்டப்படும் கருத்துக்கள் கலைகளின் மூலம் புகுத்தப்பட வேண்டும்.

நல்லெண்ணமும், நல்லுறவும், நற்சிந்தனையும் நாடு முழுவதும் பரவிப் பெருகக் கலைகள் பயன்பட வேண்டும். அறிவைத் தேடிக் கொள்ளாதவர்கள் வாழ முடியாது அவதிப்படுகிறார்கள். அதிகம் படித்தவர்கள் திக்குமுக்காடுகிறவர்கள். நடுத்தரப் பிரிவினர் இரண்டும் கெட்ட நிலையில் இன்னலுறுகிறார்கள். இவர்கட்கெல்லாம் அறிவை நிம்மதியைச் சலனமற்ற நிலையைக் கலைகள் காட்டவேண்டும். நாட்டிலே நாடகமேடைகளில் மட்டும் கலையும், கலையைச் சார்ந்த கருத்துக்களும்

மின்னி முழங்கிவிட்டாற் போதாது. வீடுகள் தோறும் கலையின் விளக்கம் என்று கவிஞன் பாரதி கூறியதுபோல் கலைகள் இல்லந்தோறும் எழுந்தருளி இருள் நீக்கி ஒளி பரப்ப வேண்டும். நமது நாட்டிலே நம்மிடையே கலைப்பெருக்கத்திற்கு குறைவில்லை. பெருக்கமிருக்கிறதே தவிர பெருக்கத்தையொட்டிய பலனைக் காணோம். நமக்குள் ஒரு நல்ல மனப்பான்மையுண்டு - அது எதையும் பாராட்டுதல், வீணை வித்துவானை, நடிப்புச் செல்வனை, பாடலாசிரியனை, இசை விற்பன்னனைப் பாராட்டி மகிழ்வதில் நமக்கு ஒரு தனி விருப்பு, பாராட்டி மகிழ்வதோடு பயன்களையும் விளைவிக்க வேண்டும். கலைகள் வெறும் பாராட்டுக்களோடு நின்றால் வாழ்வுக்கு பயன்படாத வீண்பொழுது போக்காய் முடியும்! நம்மிடையே சந்தேகமும், கள்ளத்தனமும் இப்போது உருவாகியிருக்கின்றன. பொருள் உள்ளவனிடத்திலே இல்லாதவன் களவாய் கவர்ந்து செல்ல நினைக்கிறான் பொருள் உள்ளவன். நல்லவனைக்கூட சந்தேகித்து தற்காப்புத் தேடிப் பொருட்காப்புச் செய்கிறான். முன்பெல்லாம் பனி, மழை, வெய்யில் போன்றவற்றிற்கும் விலங்குகள் போன்றவற்றிற்கும் தப்பித்துக்கொள்ளவே தற்காற்புத்தேடி வீடுகளை கட்டினார்கள். இன்று பக்கத்து வீட்டினைப் பகைவனாக்கி அவனை நம்பாமல் திருடனாக்கி அயோக்கியனாக்கி அவனிடம்ட இருந்து நம்மை நாம் காப்பாற்றவே வீடுகளை எழுப்புகிறோம். களவு, காவல் என்ற தத்துவ அடிப்படையில் வீடுகளைக் கட்டுகிறோம்.

இந்த நிலை மாறவேண்டும், மாற்றத்தைக் கலைகள் போதிக்க வேண்டும். மனித வாழ்வின் எல்லாத்துறைகளுக்கும் வேண்டிய நல்லுணர்வுகளைக் கலைகள் காட்ட வேண்டும், உழைத்துப் பிழைத்து முன்னேற வேண்டிய அவசியத்தை உணர்த்த வேண்டும். பாடுபடுபவன் உழைப்பவன் நல்லபடி வாழ அதிக ஆசையற்றுப் போதுமென்ற மனத்துடன் பொதுமை வாழ்வில் அக்கறை கொள்ள மனிதன் ஆற்றுப்படுத்த ஆவன செய்ய வேண்டும். "கொடுக்கும் தெய்வம் கூரையைப் பிய்த்துக்கொண்டு கொடுக்கும்" என்ற நொந்த, நைந்த மனோபாவத்துடன் தூங்கும் ஏழையை விழிக்க வைக்க வேண்டும். சமுதாய விழிப்பிற்கும், அகத்துறைப் புரட்சிக்கும் கலைகள் தொண்டாற்றி வெற்றி பெறவேண்டும்.

கடவுள் நம்பிக்கையில் ஊறிய - தெய்வக் கொள்கையைப் பாராட்டுகிற மனித சமுதாயத்தை உண்டாக்கி - சம வாய்ப்புச் சமுதாயத்தில் நாட்டம் கொண்டவர்களை வாழ்த்தவும், கலைகள் வழிவகுக்க வேண்டும்.

முதலாளி, தொழிலாளிகளுக்கிடையே இருக்கிற வேற்றுமைகளை அழித்தொழித்து அருள் வெள்ளம் பெருக்கெடுத்தோடுமாறு செய்யவேண்டும். இறைவன் ஒருவனே நமக்கெல்லாம் முதலாளி, நாம் எல்லோரும் அவனது தொழிலாளிகள் என்ற எண்ணம் மக்கள் மத்தியில் அரும்பி மலரவேண்டும். தாய்மொழிப்பற்றும், தாய்மொழி நாகரிகமும், தாய்மொழி வழிபாடும் எங்கும் எல்லாரிடத்திலும் பரவ வேண்டும். மனிதனிடையே "ஏழை என்றும் அடிமை என்றும் எவருமில்லை ஜாதியில்" என்ற மனோதத்துவம் தேவை, மனிதர்களிடையே பாமர மனிதர்கள் இருப்பது நமக்கு இழிவைத் தருகிறது. மரங்களிலேகூட பாமரங்கள் இல்லை. தென்னையிலோ, பனையிலோ, பலாவிலோ பாமரர்கள் உண்டா? ஆனால் நம்மிடையே எத்தனை வகைப்பட்ட பாமரங்களை உண்டாக்கி இருக்கிறோம்.

எனவே, கலைகள் கருத்தைக் கொண்டவையாக - கருத்தை இருத்தி இன்ப அன்பு வாழ்வுக்கு அடிகோலுவனவாக இருக்க வேண்டும். மனித மனங்களைத் தவிர ஏனைய உயிர்களின் உள்ளங்களைப் பிணிக்கும் ஆற்றல் கலைகளுக்கு உண்டு. குறிப்பாக ஆனாய நாயகரின் வரலாறு இசைமூலம் மிருக இனத்தையும், பறவையினங்களையும் ஈர்த்திழுத்தமையினைக் காட்டி நிற்கிறது. ஆகவே கருத்தைப் பிணிக்கும் கலைகள் நயத்தக்க கருத்துக்களைப் பரவச் செய்ய பயன்பட வேண்டும்; கலைஞர்களும் தேவையானவற்றைக் காட்ட வேண்டும் - போதிக்க வேண்டும், மக்கள் விரும்புவதைக் காட்டக் கூடாது. மக்களுக்கு எது தேவையோ அதைக் காட்ட வேண்டும்; வாழ்க்கை ஒரு நாடகம். நாமெல்லாம் நடிகர்கள். நடிகர்களிடத்திலே நல்லுணர்ச்சி உண்டென்றால் தான் நாடகம் சிறக்க வழியுண்டு. நல்லுணர்ச்சியோடு நற்சிந்தனையாளரைப் படைக்க கலைகள் உதவவேண்டும்.

- நன்றி : 1976 ஆம் ஆண்டு அனுவிரதம் மாத இதழ் பக்கம் 5-8



"மக்கள் சிந்தனை" சந்தாதாரர்களுக்கும்,
வாசகர்களுக்கும், அன்பர்களுக்கும்
இனிய புத்தாண்டு / பொங்கல்
வாழ்த்துக்களை
அன்புடன்
தெரிவித்துக்கொள்கிறோம்.

- ஆசிரியர்

அமரரான தந்தை உங்கள் வடிவில் வந்து அன்பொழுகப் பேசுதல்போல் உணர்ந்தேன்!

வள்ளுவரும் அப்பரும்ஓர் வடிவம் பெற்று
வந்ததுபோல் வாழ்ந்திட்ட ஞானத் தந்தை!
தெள்ளமுதாய் ஆற்றியநல் உரையி னாலே
செவிமடுத்தோர் சிந்தைகளைக் கவர்ந்த செம்மல்!
உள்ளத்தின் ஒளியான குறளின் மேன்மை
உலகமெல்லாம் பரவிடவே செய்த சான்றோர்!
வள்ளலென அருள்மாரி பொழிந்த மேகம்!
வாழ்விலெனை உயர்த்திவைத்த அன்புத்தெய்வம்
அடிகளென்றால் ஒருவர்தான், அவரேயென்று
அனைவருமே போற்றிட்ட அறிவுக் கோமான்
அடிச்சுவட்டில் பயணித்து அவர்கள் போன்று
அருந்தமிழில் உரையாற்றும் திறமும் பெற்று
படித்தபல நூல்களது நுட்பம் தோன்ற
பார்வையாளர் மனங்களிலே மகிழ்ச்சி தோன்ற
அடிக்கரும்பின் சுவையதனைச் சொல்லில் காட்டும்
ஆற்றலினை உங்களது உரையில் கண்டேன்!
அமரரான தந்தைஉங்கள் வடிவில் வந்து
அன்பொழுகப் பேசுதல்போல் உணர்ந்தேன் நேற்று!
எமதுவேந்தர் அழைப்பேற்று வந்த தற்கும்
ஏற்றஉரை தந்ததற்கும் இனிய நன்றி!
சமுதாயம் போற்றுகின்ற ஞானி யான
தங்கள்திரு வடியதனைத் தொடரும் வாய்ப்பு
அமைந்திட்டால் யான்பெற்ற பேறு யென்று
ஆற்றிடுவேன் தமிழ்த்தொண்டு எந்த நாளும்!

- கரு. நாகராஜன்

பேராசிரியர் பழ. முத்தப்பனார்க்கு அஞ்சலி



தமிழ்ப் பேராசிரியரும் சைவ சித்தாந்த அறிஞருமாகிய பழ. முத்தப்பனார் புதுவயலில் 19.9.2021 அன்று காலமானார் என்பதை "மக்கள் சிந்தனை இதழ்" ஆழ்ந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறது. இவர் தமிழ்மொழியிலும் சைவசித்தாந்தத்திலும் தோய்ந்து சிறந்த அறிஞர்; சிறந்த சொற்பொழிவாளர்; கருத்தாழமிக்க எழுத்தாளர்; குன்றக்குடித் திருவண்ணாமலை ஆதீனம் 45ஆவது குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமானால் 1990ஆம் ஆண்டு குன்றக்குடி விசாகவிழாவில் "தமிழாகரர்" பட்டம் பொற்பதக்கத்துடன் வழங்கப்பெற்ற பெருமையினர். இவர்தம் மறைவு தமிழுலகிற்கும் சைவ சமய உலகிற்கும் பேரிழப்பாகும். இவர்தம் மறைவால் துயருற்றிருக்கும் இவர் குடும்பத்தினருக்கு "மக்கள் சிந்தனை" ஆழ்ந்த இரங்கலைப் புலப்படுத்திக்கொள்கிறது. இத்தகைய அறிஞரின் நல்லுயிர் இறைவன் திருவடி நீழலில் இன்ப அமைதி பெற "மக்கள் சிந்தனை" இறைஞ்சுகிறது; அப்பெருமானை நினைந்து அஞ்சலி செய்கிறது.

– ஆசிரியர்

மயிலம் சி.பா.சு.தமிழ்க் கல்லூரியிலிருந்து முதல்வர் பணி உயர்வால் அவர் படித்த மேலைச் சிவபுரிக் கணேசர் செந்தமிழ்க் கல்லூரிக்கு வந்த சில ஆண்டுகளில் ஒருதுறைக் கல்லூரியாக இருந்ததைப் பல்துறைக் கல்வி கற்பிக்கும் சுயநிதிக் கல்லூரியாக்கி ஓய்வு பெற்ற மறுநாளே திருச்சியில் செட்டிநாட்டுக் கலை அறிவியல் கல்லூரியின் முதல்வர் பொறுப்பேற்றார்.

வாடகை இடத்தில் இயங்கிய அக்கல்லூரிக்கென நிருவாகத்தார்கள் முன்பே திருச்சி திண்டுக்கல் புறவழிச் சாலையில் வாங்கி வைத்திருந்த நிலப்பரப்பில் கல்லூரி காட்டும் கூடுதல் கண்காணிப்பில் முத்தப்பர், நிருவாக ஒத்துழைப்பால் கட்டிடங்கள் கட்டிக் கல்லூரியை மாற்றி அமைத்தார். இதன் பொருட்டான அவர்தம் பாடுகள் அனைத்தையும் நான் நன்கறிவேன். இந்த அசாத்தியமான அவரது சிகரம் தொட்ட சாதனை என்பதோடு நகரத்தாரின் வரகவி வள்ளலான பாடுவார் முத்தப்பர் பாடிய பாட்டுக்குரிய பொருத்தமாகவும் இருந்தது என்பதுதான் இன்றியமைததாகும்.

காடுவெட்டிப் போட்டுக் கடிய நிலந்திருத்தி
வீடுகட்டிக் கொண்டிருக்கும் வேள்வணிகர் - வீடுகட்கு
அன்றைக்கு வந்திட்ட அம்மா இலக்குமியே
என்றைக்கும் நீங்கா திரு.

என்ற பாடுவார் முத்தப்பர் பாட்டிற்கேற்ப நண்பர் முத்தப்பர் கருவைக் காடு மண்டிய இடத்தைத் திருத்திக் கல்லூரி கட்டிக் கல்வித் தெய்வத்தைக் கொலுவீற்றிருக்கச் செய்தார்.

இச்செயல், காடு கெடுத்து நாடாக்கியவன் எனச் சங்க இலக்கியம் புகழும் கரிகால் பெருவளத்தானோடு ஒப்பத் தகுந்ததாகும். மேலும் இராமனுடன் கானம் சென்றோர் புற்றுடைக் காடெல்லாம் நாடாக்குவோம் என்பதாகக் கூறிய கம்பரின் கருத்துக்கும் ஒப்பானதாகும். இவற்றால் உரையும் பாட்டும் உடையவர் முத்தப்பர் என்ற எனது கணிப்பு கனவன்று, நனவு என அன்னார்க்கான அஞ்சலியைக் கீழ்வரும் பாடல்களாலும் தெரிவித்துக்கொள்கிறேன்.

1. மாமயில ஊரில் மலர்ந்திட்ட நற்றொடர்பால்
மாஞ்சோலைப் பூவின் மகரந்த - மாச்சேர்க்கைப்
போலவும் பொன்னார் புதுவயல் நாற்றங்கால்
போலவும் செய்தார் எனை!

2. அவர் சுற்றம் என்சுற்றம் போலாக்கி நீண்ட
சுவரான சீனத்தின் நட்பால் – கவர்ந்திட்ட
முத்தமிழ் முத்தப்பர் முத்திரை வாழ்வுதான்
முத்தரைக்கும் முத்துப் பதிப்பு!

3. குவலயம் போற்றுறும் குன்றக் குடியும்
தவலரும் மாமயில மும்தான் – நுவலரும்
நட்பின் தொடர்பிற்கு நல்லாதீ னங்களே
பெட்பாய் இருத்ததெங் கட்கு!

4. எத்தனை மேடைகள்! எத்தனைப் பேச்சுகள்!
அத்தனையும் வென்று விளங்கினார்! – வித்தகமாய்ச்
சித்தாந்தம் தன்னைத் தொடர்வகுப்பாய்த் தாம் நடத்தி
மொத்தபுகழ் கொண்டார் முனைந்து!

5. ஆச்சி அழகம்மை முத்தப்பர் பேற்றிற்கு
மூச்சாய் இருந்தாரே முப்போதும்! – வீச்சுவாள்
கூர்த்த அறிவுமகன் கூர்பழநி யப்பனுடன்
வார்ப்பாம் மகள் மீனாவும்!

6. மாணாக்கர் பல்லோரை மாமகன்மை யாய்ப்பெற்றுக்
காணாத கல்விக் குதவிய – மாண்பெல்லாம்
என்போன்றோர் தாமுணர்வர்! ஈன்றதாய் தந்தைபோல்
அன்னார்க் கிருந்தார் அவர்!

7. வரலாறு மிக்க சரசுவதி சங்க
வரலாற்றுப பதிவில் எனையும் – வரமாகச்
சேர்த்த வளத்தாலே சீர்செட்டி நாட்டில்நான்
பார்த்திட்டேன் பல்வள வாழ்வு!

8. வாழி அவர்புகழ்! வண்டமிழ்ச் சித்தாந்தம்
ஊழி உளவரை ஓர்ந்தென்றே! – ஏழிசை
உற்ற குடும்ப பழநியப்பர் மீனாட்சி
பெற்றோர்தம் ஆசி பொலிந்து!

மக்களின் மனதில் நிறைந்து நிற்கும் மதுரை ஆதீனம்

(தவத்திரு குன்றக்குடி பொன்னம்பல அடிகளார்)

மதுரை ஆதீனம் 292-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் 13.08.2021 வெள்ளிக்கிழமை இரவு பரிபூரணமடைந்துவிட்டார்கள்.

சென்னையில் 14.08.2021 சனிக்கிழமை காலை 9.00 மணியளவில் மாண்புமிகு தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலின் தலைமையில் நடைபெற்ற இந்துசமய அறநிலையத்துறை நிகழ்ச்சியில் மதுரை ஆதீனம் 292-வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் மறைவுக்குப் புகழஞ்சலியும் மௌனப் பிரார்த்தனையும் நிறைவேற்றப்பட்டன.

27.05.1975ல் மதுரை ஆதீனத்தில் இளைய பட்டம் சூட்டப்பெற்று 14.03.1980ல் குருமகாசந்நிதானமாகப் பொறுப்பேற்று தம் ஆன்மிகப் பயணத்தைத் தொடங்கினார்கள். அருளாட்சிபுரிந்து பொதுவாழ்வில் இடையறாது பணிசெய்தார்கள். நமது குன்றக்குடி ஆதீனம், அவருக்குத் தாய்வீடாக இருந்தது.

தவத்திரு குன்றக்குடி அடிகளார்தான் தன் ஆன்மிக வழிகாட்டி என்று அடிக்கடி சொல்வார்கள். குருமகாசந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகள் பெருமானின் சமய, சமூகப் பணிகள் மற்றும் தமிழ்ப் பணிகளைப் பார்த்த ஈர்ப்புதான் அவரை துறவுப் பாதைக்கு அழைத்து வந்தது என்று மனப்பூர்வமாகச் சொல்வார்கள். மதுரை ஆதீனத்தின் பூர்வாசிரமத் தந்தையார் தியாகி குமாரசுவாமி பிள்ளை, குன்றக்குடி ஆதீனத்தில் தொண்டாற்றியவர். மதுரை ஆதீனத்தில் இளைய பட்டமாகப் பொறுப்பேற்கும் முன்பு நம் மகாசந்நிதானத்திடம் ஆசிபெற்றார்கள்.

மதுரை ஆதீனம் துறவு ஏற்கும் முன்பு மதுரையில் நமது பூர்வாசிரம இல்லத்துக்கு அடிக்கடி வந்து, நமது பூர்வாசிரம தாத்தா, பூர்வாசிரமத் தந்தை ஆகியோரோடு அளவளாவி இல்லத்தில் உணவருந்திச் செல்வதுண்டு. பள்ளிப்பருவத்தில் நாம் அடிக்கடி மதுரை ஆதீனத்துக்குச் செல்வதுண்டு. பூசை வழிபாடுகளில் கலந்துகொள்வதும் மதுரை ஆதீனத்தில் மாணவர்களுக்கு நடைபெறும் பேச்சுப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில் கலந்துகொண்டு அப்போதைய மதுரை ஆதீனம்

குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பராமாச்சாரிய சுவாமிகளிடம் பரிசு பெற்றுவிட்டு, பின்னர் இளைய சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ திருவருள் தவயோக சோமசுந்தர தேசிக பரமாச்சாரிய சுவாமிகளிடம் பரிசு பெற்றுவிட்டு, பின்னர் இளைய சந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத தேசிக பரமாச்சாரிய சுவாமிகளிடம் அளவளாவிவிட்டு வருவதுமுண்டு.

மதுரை ஆதீன, 292-வது குருமகாசந்நிதானம் தமிழ்மொழிப் பற்றுடன் ஆன்மிகப் பணிகளில் தீவிரமாகப் பணியாற்றியவர்கள். தமிழ் அர்ச்சனை, தமிழ் வழிபாடு, தமிழ்வழி குடமுழுக்கு ஆகியவற்றில் நம்மோடு இணைந்து குரல் கொடுத்தவர்; கம்பீரமான கணீர் குரலுக்குச் சொந்தக்காரர்.

சொலல்வல்லன் சோர்விலன் அஞ்சான் அவனை
இகல்வெல்லல் யார்க்கும் அரிது

என்ற குறளுக்கு இலக்கணமாக, சிறப்பாகப் பேசக்கூடிய நற்றமிழ் நாவலர். மேடையில் தேவாரம் திருமுறைகளை இனிமையாகப் பாடுவார். பிற சமயப் பாடல்களையும் பாடுவார். சமய நல்லிணக்கத்தைக் கடைப்பிடித்து பிற சமயத் தலைவர்களோடு அன்பும் நட்பும் கொண்டிருந்தார். பல அரசியல் தலைவர்களோடு அன்பும் நட்பும் கொண்டிருந்தார். உலக நாடுகள் பலவற்றுக்கும் சென்று ஆன்மிகப் பணியாற்றியவர். செய்தித்தாள், தொலைக்காட்சி முதலிய ஊடகங்களில் நேர்காணல் மற்றும் செய்திகளை தயக்கமின்றி வழங்கியவர். ஈழத் தமிழர்களுக்கு உரக்கக் குரல் கொடுத்தவர். அனைத்து ஆதீனத் தலைவர்களிடமும் அன்பும் நட்பும் நல்லிணக்கமும் கொண்டிருந்தவர். மனதில்பட்ட கருத்தை அச்சமின்றி, தயக்கமின்றிக் கூறுவார். மதுரை ஆதீனத்தின் நிர்வாகத்தைச் செம்மையாக நடத்தி ஆதீனத்தின் வருவாயைப் பன்மடங்கு உயர்த்தியவர். ஆதீனத் திருமடத்தை மிக அருமையாகத் திருப்பணி செய்து பொலிவுபடுத்தியவர். ஆதீனத்துக்குச் சொந்தமான திருக்கோயில்களுக்கும் மிகச் சிறப்பாகத் திருப்பணிகளைச் செய்து குடமுழுக்கு விழாக்களைச் சிறப்புற நடத்தியவர். எண்ணற்ற கோயில் குடமுழுக்கு விழாக்களில் கலந்துகொண்டு மேடைச் சொற்பொழிவுகள் பலவற்றை நிகழ்த்தியவர். பத்திரிகைத் துறையில் பணியாற்றியவர். எழுத்தாளர், பேச்சாளர், சிந்தனையாளர் எனப் பன்முகப் பரிமாணத்தோடு விளங்கிய மதுரை ஆதீனம் 292-வது

குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகளின் பரிபூரணம் ஆன்மீகத் தளத்துக்கு ஈடுசெய்ய முடியாத பேரிழப்பு.

ஸ்ரீலஸ்ரீ ஹரிஹர ஞானசம்பந்த தேசிகப் பரமாச்சாரிய சுவாமிகள் மதுரை ஆதீனத்தின் 293-வது குருமகாசந்நிதானமாக ஆதீனத்தின் அருளாட்சிப் பொறுப்பை ஏற்றிருக்கிறார். அவர்களும் குன்றக்குடி ஆதீனத்தின் தம்பிரானாகச் சில காலம் அருள் தொண்டாற்றியிருக்கிறார். பின்னர் திருவாவடுதுறை ஆதீனத்தின் கட்டளைத் தம்பிரானாக சிறப்பாக அருள் தொண்டாற்றியிருக்கிறார். வாழையடி வாழை என வரும் ஆதீன மரபு தொடர்கிறது. ஏறத்தாழ 40 ஆண்டுகளுக்கு மேலாக ஆன்மிகத் தளத்தில் அருளாட்சி புரிந்த மதுரை ஆதீனம் 292வது குருமகாசந்நிதானம் ஸ்ரீலஸ்ரீ அருணகிரிநாத ஞானசம்பந்த தேசிக பரமாச்சாரிய சுவாமிகள் பரிபூரணமடைந்தாலும் மக்கள் மனதில் நிறைந்து நிற்கிறார்.

சிவத்திரு.புலவர் நீ.சீ. சுந்தரராமனார்க்கு அஞ்சலி!



வாழ்நாளெல்லாம் சைவ சமய நெறி நின்று சைவத் திருமுறைகள் பரப்பும் திருத்தொண்டராகத் திகழ்ந்த மதுரை புலவர்.நீ.சீ. சுந்தரராமன் அவர்கள் 11.11.2021 அன்று சிவனடி சேர்ந்துவிட்டார். இவர் சைவசமயப் பணிகளில் சிறந்து திகழ்ந்தவர். "உழவாரம்" மாத இதழின் ஆசிரியராக அமர்ந்து மிகச் சிறந்த முறையில் சைவம் சார்ந்த கட்டுரைகளைப் பதிப்பித்து வந்தவர். தவத்திரு அருள்நெறித் தந்தையவர்கள் தொடங்கி நடத்திவந்த திருப்புத்தூர்த் தமிழ்ச் சங்கத்தின் முதன்மை உறுப்பினர்களில் ஒருவராக அமைந்து பணியாற்றியவர். சைவசீலமும் தமிழ்ப்புலமையும் இருவிழிகளாகக் கொண்டு வாழ்ந்த இப்பெருமகனாரின் மறைவு குறித்து "மக்கள் சிந்தனை" வருந்துகிறது. இவரை இழந்து துயரத்தில் ஆழ்ந்திருக்கும் இவர்தம் குடும்பத்தினருக்கு "மக்கள் சிந்தனை" இரங்கலைப் புலப்படுத்திக் கொள்கிறது. இவர்தம் நல்லுயிர் இறைவன் திருவடிக் கீழ் அமர்ந்து இன்ப அன்பினைத் துய்க்கப் பிரார்த்திக்கிறது.

– ஆசிரியர்

தமிழறிஞர். க.ப. அறவாணன் அவர்களின் நினைவஞ்சலி



இப்பேரறிஞரின் எண்பதாம் ஆண்டு பிறந்தநாள் 9.8.2021 ல் அமைந்தது. அவர்தம் நினைவு மறக்க இயலாதது. இப்பேரறிஞரின் தொடர்பு நமது குன்றக்குடி ஆதீனத்தின்பால் பெரிய சந்நிதானம் தவத்திரு குன்றக்குடி அடிகளார் பெருமான் காலம் முதல் அமைந்ததாகும்.

இவர் மனோன்மணயம் சுந்தரனார் பல்கலைக் கழகத் துணைவேந்தராகச் சிறப்பாகப் பணியாற்றியவர். நமது ஆதீனம் ஆண்டுதோறும் நடத்தும் வள்ளல் பாரி விழாவில் "நூலறி புலவர்" பட்டம் வழங்கிப் பாராட்டிச் சிறப்பிக்கப் பெற்றவர்; அண்ணாமலை அரசரின் முத்தையா செட்டியார் விருது பெற்றவர். அறிவியல் பேரவை விழாக்களில் பங்கெடுத்துப் பணியாற்றியவர். தமிழில் துறை போய பேரறிஞர். ஆராய்ச்சி நூல்கள் பல எழுதிப் புகழ்பெற்றவர். சிறந்த சொற்பொழிவாளர். தமிழ்நாடு அரசின் "திருவள்ளுவர் விருது" பெற்றவர். நமது ஆதீனத்தின் பால் நிறையன்பு பூண்டு ஒழுகியவர். இப்பேரறிஞரின் 80 ஆம் ஆண்டு பிறந்த நாளில் அவர்தம் நினைவைப் போற்றி "மக்கள் சிந்தனை" இதழ் வணங்குகிறது.

– ஆசிரியர்

சிறப்பாசிரியருக்கு வந்த கடிதங்கள்

தற்போது வந்த மக்கள் சிந்தனையின் முகப்பட்டையிலும் பின்னும் தமிழக முதல்வர் அவர்களின் படத்துடன் பாராட்டி எழுதி வாழ்த்தியதைப் படித்து மகிழ்ந்தேன்,

நல்லாட்சி தன்னை நயமாகத் தானுமே
வல்லவாறு தந்தாள வந்திட்ட - நல்ல
முதல்வராம் ஸ்டாலின் முறையான வாழ்வை
இதமாகத் தந்ததோ டன்றிப் - பதம்பதமாய்ப்
பன்முகப் பாங்கில் பலப்படப் பாராட்டி
நன்முகமாய் வாழ்த்திய வாழ்த்துத்தான் - மன்பதை
ஆட்சிக்காம் நல்ல வழிகாட்டி ஆகுமென
மாட்சியுடன் தந்தது மாண்பு!

வந்த மக்கள சிந்தனையில் நம் அடிகளார் அவர்கள் தமிழக முதல்வரைப் பாராட்டிய பாங்கு அருமையாய் இருந்தது. படங்களும் அருமை.

தெ. முருகசாமி, புதுச்சேரி

தை - ஆனி மாத இதழில் நமது தமிழக முதல்வர் மற்றும் அமைச்சர் பெருமக்களையும் சந்தித்து வாழ்த்து வழங்கிய புகைப்படத்தைப் பார்த்து மட்டற்ற மகிழ்ச்சி அடைந்தேன்.

நமது ஆதீனத்தின் சார்பில் ரூ. இரண்டுலட்சம் மதிப்புள்ள ஆக்ஸிஜன் செறிவூட்டிகளை காரைக்குடி அரசு மருத்துவமனைக்கு வழங்கியதைக் கண்டு நெகிழ்ச்சி அடைந்தேன்.

நம் மகாசன்னிதானம் அவர்கள் இன்னும் பற்பல நற்காரியங்கள் ஆற்றவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனை வேண்டுகிறேன்.

- V.வலம்புரி பாலு, நத்தக்கடையூர்,

ஆனித் திங்கள் மக்கள் சிந்தனை இதழ் "ஊர் ஆவும் குருட்டாவும்" என்ற தவத்திரு சுவாமிகளின் திருவாசக விளக்கம் படித்தேன்.

அடியேனின், நீண்ட நெடிய காலத்தை இறைவழிபாடு செய்யாமை எத்தகை குருட்டாவின் நிலை என்பதை தெளிவுபடுத்தியது.

விழிப்புணர்வு பெற்று மெய்யடியார் நிலையைப் பெறத் தூண்டியது.

இவ்வளவு காலம் வீணாகியது எண்ணி வெட்கம் அடைகிறேன்.

தவத்திரு அடிகளார் அவர்களின் தொடர் கட்டுரை பல உயிர்களை விழிப்புணர்வுக்கு தட்டி எழுப்பும்.

- தி. கண்ணையன்

அருள்மிகு சன்னிதானம் அவர்களுக்கு பணிவான வணக்கம். தாங்கள் மதுரை வானொலியில் தினசரி காலை 8.00 மணிகுப் பேசும் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" நிகழ்ச்சி மிக அருமை. வாழ்க தங்களது தமிழ் தொண்டு.

நாவன்மை மிக்க தங்களது குரல்வளம் வாழ்க! வளர்க! தங்களது பிறந்த நாளுக்கு எனது வாழ்த்துக்கள்.

– ஏ.எஸ்.பி. சிவசுந்தரம், ஹார்விபட்டி, மதுரை–5

மக்கள் சிந்தனை – தை – ஆனி இதழில் அமரர் பழ. தரும ஆறுமுகச் செம்மலர் பற்றி மரு. பரமகுரு எழுதிய இரங்கட்பா கவிதை படித்து மிகவும் துயர் அடைந்தேன்.

கோவையில் நடைபெற்ற செந்தமிழ் மாநாட்டில் தங்களின் ஆதரவுடன் அமரர் பழ. தரும ஆறுமுகச் செம்மல் வீட்டில், சரவணப்பட்டியில் தங்கியிருந்த நாட்களை நினைவு கூர விரும்புகிறேன்.

தவத்திரு குன்றக்குடி அடிகளார் மற்றும் தவத்திரு பொன்னம்பல அடிகளார் மீதும் அன்பும் பாசமும் கொண்டவர்.

நான் அங்கு தங்கியிருந்த நாட்களில் என்மீது அன்பும் பாசமும் கொண்டு, இரண்டுவேளையும் அறுசுவை உணவளித்து இன்முகம் கொண்டு உபசரித்த உத்தமர். மெய்ம்மை உணர்ந்து திருமடலின் மேன்மை பெற பல நல்ல காரியங்களைச் செய்த கருணை உள்ளம் கொண்டவர். அன்னார்க்கு எனது மனம் உவந்த அஞ்சலியைச் சமர்ப்பிக்கிறேன்.

– சுப. இராமமூர்த்தி,
மும்பைத் தமிழ்ச் சங்க முன்னாள் செயலாளர்.

நான் தங்களைத்தங்களின் சன்னிதானத்தில் சந்தித்து – ஆசிர்வாதம் பெற்றேன் – குடும்பத்துடன் மகிழ்ச்சி அடைந்தேன்.

தங்களிடம் மக்கள் சிந்தனை மலர் பெற்றேன். மலர் 34 – படித்தேன்.

ஒளிமயமான எதிர்காலம் உருவாகட்டும். பள்ளிக்கூடத்தின் – புதிய வகுப்பு அறைகள் திறப்பு விழா காணாமல் – பாதிக்கப்பட்டவர்களுக்கு அடைக்கலம் கொடுத்து – தங்க வைப்பதுடன் உண்மையான திறப்பு விழா – (அருமையான பதிவு). மகிழ்ச்சி.

எழுத்து வேந்தரே! எங்கே சென்றீர்? நற்கதை நம்பி. உயர்திரு.அய்க்கண் அவர்களின் இழப்பு தங்களுக்கு பெரிய இழப்பு என்பதை உணர்கிறேன்.

அக்ஷய் பார்க்கர்-ன் கஷ்டங்கள் படித்தேன். இருந்தாலும், உழைப்பாலும் தன்னம்பிக்கையாலும் வென்றவர்.

தஞ்சாவூர் உலகத் திருக்குறள் பேரவையில் 46- ஆண்டுவிழா தங்களின் சொற்பொழிவு சாதிமதம் கடந்தது அருமை. ராஜராஜன் பெரிய கோவில் – உண்மை சம்பவம் விளக்குகள் எரிய நெய் இல்லை – மூன்று வாரங்கள் எப்படி உங்களால் நெய் வழங்கப்பட்டது ராஜராஜன் வினவ – அந்த அம்மையார் கண்ணீர்மல்கத் தன் குழந்தைக்கு தாய்ப்பால் தராமல் அதைவிற்று நெய் வாங்கிக் கொடுத்தேன் – தாய்ப்பால் வற்றியதால் – கொடுக்க முடியவில்லை – அன்று கூறிய – வரியில் – படித்தேன். கண்ணீர் வடித்தேன் – ராஜராஜன் மேல் நம்பிக்கையும் – மக்களின் நாணயமும் ஒற்றுமை உணர்வை அளிக்கின்றது.

– R.பாலகங்காதர திலகர்,விருதுநகர்

அன்பிற்கினிய அடிகளார் அவர்களுக்கு திருப்புவனத்தில் இருந்து வாசுதேவன் ஆசிரியர் எழுதுகிறேன். நலமாக இருக்கிறீர்களா! இன்று காலை வானொலியில் "மண்ணில் நல்ல வண்ணம் வாழலாம்" என்ற கருத்துப் பெட்டகம் தங்கள் குரலில் கேட்டேன். அன்பைப் பற்றித் தாங்கள் கூறிய சிறிய கதை மிகப்பெரிய கருத்தினை உள்ளடக்கியது மிகவும் அருமை! அன்பு, கருணை, குறைந்துவரும் சூழலில் இதுபோன்ற கருத்துக்கள் மக்களைச் சென்றடைய வேண்டும். தொடர்க தங்களது பணி.

G.வாசுதேவன், திருப்புவனம்.

திருக்கயிலாய பரம்பரை, திருவண்ணாமலை ஆதீனம் 46-வது குருமகாசந்நிதானம் பொன்னார் திருவடிக் கமலங்களை வணங்குகிறேன்.

04.09.2021 தருமபுரம் ஆதீனம் கலைக்கல்லூரியின் பவளவிழாவில் தங்கள் சிறப்புரையை கேட்கும் பெரும் வாய்ப்பினைப் பெற்றேன். நான் அந்த கல்லூரியில் ஆங்கிலத் துறையில் உதவிப் பேராசிரியராக பணி செய்து வருகிறேன். சிறப்புரையில் தங்களுடைய பேச்சு என்னை மட்டுமல்லாமல் அனைத்து பேராசிரியர்களும் வியந்து கூறிய அளவில் இருந்ததாக சொல்லி மகிழ்ந்தார்கள். அதுமட்டுமல்லாமல் மாணவர்களும் தங்களை உணரும் வண்ணமாக இருந்ததாக வகுப்பில் கேட்டு தெரிந்து கொண்டேன். நான் ரசித்த பெரும் ஆளுமைகள் தவத்திரு பரிபூரணம் அடைந்த குன்றக்குடி மகாசந்நிதானம்

அதன் பிறகு மகாசந்நிதானம் இடத்தில் அதே நெறியுடன் நான் மானசீகமாக வணங்கும், பார்க்கும் இடத்தில் சந்நிதானத்தை காணுகின்றேன்.

- உ. வினோத் பூம்புகார்.

9.10.2021 அன்று சென்னையில் நடைபெற்ற தினமணி – கிங் மேக்கர்ஸ் அகாதெமி இணைந்து நடத்திய "கலாம், கனவல்ல – நிஜம்" என்ற கருத்தரங்கில் தாங்கள் ஆற்றிய சிறப்புரை வெகு சிறப்பாக இருந்தது.

நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய வாழ்க்கையில் நடந்த (பேரீச்சம்பழம், கூடை) சம்பவத்தையும், பெருந்தலைவர் காமராஜர் வாழ்ந்த எளிமையான வாழ்க்கை வரலாற்றையும், எடுத்துக்கூறி, ஐ.ஏ.எஸ் பயிலும் மாணவ, மாணவியர்களுக்கு நல்ல அறிவுரைகளுடன், பெற்றோர்களுக்குக் கீழ்ப்படிந்து, சிறந்த கல்வி ஞானம் பெற்று வாழ்க! என்று வாழ்த்தியது அருமை!

உலக மக்கள் அனைவர்களும் நோய், நொடி இல்லாமல் வாழ, வல்ல இறைவனை இறைஞ்சுமாறு மிக அன்புடன் வேண்டுகிறேன்.

– J. மௌரூப், சென்னை

தவத்திரு அடிகளார்தம் திருவடிகளுக்கு,

பணிவான வணக்கம். தங்கள் நல்லாசியுடன் எங்கள் குடும்பம் வாழ்ந்து வருகிறது. துயரம் குறைந்து வருகிறது.

சுவாமி தினமணியில் தங்களைப் பற்றிய செய்தியைப் படித்தேன். மிக்க மகிழ்ச்சியாக இருந்தது. அப்பாவின் பெருமையை, சிறப்பை அடுத்தவர் சொல்லும்போது கூடுதலாக மதிப்பு ஏற்படுமே அது போலவே தங்கள் பெருமை தெரியவருகிறது சுவாமி!

எழுத்திலும், பேச்சிலும் கொடிகட்டிவிட்டீர்கள். குன்றக்குடி, சிவகங்கை தமிழ்நாடு, இந்தியா, தில்லி என உலக நாடுகள் என அக்கொடி ஒளிவீசிப் பறக்கிறது! அன்பும் பணிவும் உள்ள

தாயம்மாள் அறவாணன்

தீபஒளித் திருநாளான இன்று காலை (4.11.2021) மதுரை வானொலி மூலம் அடிகள் வழங்கியருளிய வாழ்த்துரை கேட்டு மகிழ்ந்தேன்.

அடர்த்தியான பல செய்திகள் அருள் வாசகமாக இருந்தன. அன்பு, நட்பு, தோழமை, குழந்தை முதல் அனைவரின் குதூகலம், பசித்தோர்க்கு உணவு வழங்கல், குலுக்கும் கைக்குள் குலுங்கும் குரோதம் மற்றும்

கண்பார்வை இலார், நடக்கக் காலில்லாதவர், கடவுள் வரவும் வரமும் - இத்தொடர்பான மருத்துவமனைக் காட்சிகள் எல்லாம் உலகியலாகவும்,

தீப ஒளிக்குப்பின் பின் வரும் கந்தர் சஷ்டியின் விரதத் தத்துவம், சூரன் வதை என்பது நரகாசூரனைப் போன்றதன்று திருத்தத்திற்குரிய ஆன்மீகம்

என்றெல்லாம் தொடர்மழைபோல அருள் வாக்குமழையை அடிகள் பெய்யப் பெய்ய நனைந்து மகிழ்ந்ததை நினைவு கூர்ந்து,

குவலயம் போற்றும் குன்றக்குடியை மறவா நினைப்பில் மிதந்து மதுரை வானொலியைப் பாராட்டி நன்றி கூறும்

குன்றக்குடி ஆதீன அன்பன்

- தெ. முருகசாமி

உரையும் பாட்டும் உடைய முத்தப்பர்

(தமிழாகரர் தெ. முருகசாமி)

உரையும் பாட்டும் உடையோர் சிலரே!
மரையிலை போல மாய்ந்திசினோர் பலரே!

என்கிறது (27) புறநானூறு. உரை என்பது புகழுரை. இது நிகழ்காலத்து மக்களால் தரப்படும் சொற்பரிசு. பாட்டு என்பது எதிர்காலந்தொட்டு எல்லாக் காலத்தும் நின்று நிலைப்பதற்கான பாட்டுப் பரிசு. இந்த இரண்டையும் சோழன் நலங்கிள்ளி ஒருசேரப் பெற்றதாக உறையூர் முதுகண்ணன் சாத்தனார் எனும் புலவர் பாடிப் புகழ்ந்தார்.

என் ஆருயிர் நண்பர் சித்தாந்த முனைவர்.பழ. முத்தப்பனார் அவர்கள் தம் வாழ்நாளின் இறுதிக் காலத்தில் உறையூரை ஒட்டிய பகுதியில்தான் வாழ்ந்து மறைந்ததால் உறையூர் முதுகண்ணன் சாத்தனாரின் பாடற்பொருள் பொருத்தத்திற்கு உரியராக இருந்தார் என அஞ்சலிக்கின்றேன்.

அவரால் தான் நானும், என் குடும்பமும் செட்டிநாட்டு வாழ்வை 35 ஆண்டுகள் பெற்றோம் என்பதை நன்றியுடன் கூறக் கடமைப்பட்டுள்ளேன். அன்னாரைப் பற்றி எவ்வளவோ கூறலாமாயினும் ஒன்றை நினைவு கூர்வது அன்னார்க்கான இலக்கிய வாழ்வாகப் பிறக்கும் எடுத்துக்காட்டாக இருக்கும் எனத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

மக்கள் சிந்தனை

சமய சமுதாய இலக்கிய திங்களிதழ்

சிறப்பாசிரியர் : **தவத்திரு பொன்னம்பல அடிகளார்**

விவரம்	அளவு	1 வெளியீடு	12 வெளியீடு
பின்அட்டை வெளிப்புறம்	1 பக்கம்	ரூ. 750	ரூ. 7500
அட்டை உட்புறம்	1 பக்கம்	ரூ. 650	ரூ. 6500
இதழ் உட்புறம்	1 பக்கம்	ரூ. 500	ரூ. 5000
இதழ் உட்புறம்	½ பக்கம்	ரூ. 350	ரூ. 3500

சந்தா விவரம்

தனி இதழ்	ரூ.	8.00
ஆண்டுச்சந்தா	ரூ.	90.00
ஆயுட் சந்தா	ரூ.	1000.00
புரவலர் கட்டணம்	ரூ.	2000.00

சந்தா – விளம்பரம் அனுப்பவேண்டிய முகவரி :

நிர்வாகி
மக்கள் சிந்தனை
குன்றக்குடி – 630 206
சிவகங்கை மாவட்டம்

இந்தியன் வங்கி, பிள்ளையார்பட்டி கணக்கு எண் : 554267544 மூலமும் மணியார்டர், வங்கி வரைவோலை / காசோலை மூலமும் அனுப்பலாம்.

ஆதீன இணையதள முகவரி : website : www.kkmutt.org

ஆசிரியர் : **மரு. பரமகுரு**

அச்சிட்டு வெளியிடுவோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி

உ
சிவமயம்



தெய்வப்பழநியில் புகழ்பெற்றது

பழநி

பரிமள விலாஸ்

S.சித்தனாதன்

ஜவ்வாது வாசனை விபூதி

&

ஸ்பெஷல் பஞ்சாமிர்தம்

வாங்கி உபயோகியுங்கள்

Prop : S. சித்தனாதன் சன்ஸ்

அடிவாரம், பழநி - 624 601.

போன் கடை : 242405 வீடு & ஸ்டோர் : 242406





குன்றக்குடி திருவண்ணாமலை ஆதீனக் கல்வி அறக்கட்டளை

தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவு

தொழிற் பயிற்சி மையம் (ITI & IS)

(மத்திய, மாநில அரசு அங்கீகாரம் பெற்றது)

குன்றக்குடி - 630 206

மாணவர் சேர்க்கை நடைபெறுகிறது

மத்திய அரசு அங்கீகாரம் பெற்ற தொழிற் பிரிவுகள்

தொழிற்பிரிவுகள்	பயிற்சிக்காலம்	குறைந்தபட்ச கல்வித்தகுதி
1. MMV – மெக்கானிக் (மோட்டார் வெகிக்கிள்)	2 ஆண்டுகள்	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
2. EM – எலக்ட்ரானிக் மெக்கானிக்	2 ஆண்டுகள்	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
3. COPA - கம்ப்யூட்டர் ஆபரேட்டர் & புரோகிராமிங் அசிஸ்டெண்ட்	1 ஆண்டு	10 ஆம் வகுப்பு தேர்ச்சி
மாநில அரசு அங்கீகாரம் பெற்ற தொழிற் பிரிவுகள்		
4. A.C. – மெக்கானிக்	1 ஆண்டு	8 ஆம் வகுப்பு தேர்ச்சி
5. E.T. எலக்ட்ரிகல் டெக்னீசியன்	1 ஆண்டு	8 ஆம் வகுப்பு தேர்ச்சி

★ வெளியூர் மாணவர்களுக்கு விடுதி வசதி உண்டு. ★ பயிற்சி முடிந்ததும் வேலை வாய்ப்பு. அப்ரன்டிஸ் பயிற்சிக்கு ஏற்பாடு செய்யப்படும்.

★ SC/ST மாணவர்களுக்கு அரசு உதவித்தொகை பெற்றுத் தரப்படும்.

★ பயிற்சியின்போது புகழ்பெற்ற நிறுவனங்களுக்கு அனுப்பி (IN PLANT TRAINING) பயிற்சி அளிக்கப்படும்.

★ குறைந்த இடங்களே உள்ளன. விரைவில் சேர்ந்து பயனடைவீர்

மேலும் விவரங்களுக்கு,

முதல்வர். தவத்திரு குன்றக்குடி அடிகளார் நினைவுத் தொழிற்பயிற்சி மையம்

குன்றக்குடி - 630 206, சிவகங்கை மாவட்டம்

☏ : (04577) - 264287, 264457, செல் : 9047325088, 9790543857, 97[illegible]20889



11-12-2021 அன்று மதுரையில் நடைபெற்ற உலகத்திருக்குறள் பேரவை விழாவில் குருமகாசந்நிதானம் அவர்களுடன் தமிழக நிதியமைச்சர் மாண்புமிகு. பி.டி.ஆர். பழனிவேல் தியாகராசன் அவர்கள்...




5-12-2021 தேவகோட்டையில் நடைபெற்ற பாரதி விழாவில் சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் முனைவர். த. செந்தில் குமார், I.P.S., அவர்களுடன்...



18-12-2021 காரைக்குடியில் நடைபெற்ற கலைஞர் தமிழ்ச்சங்கத்தின் வெள்ளிவிழா...

BOOK POST
Book pocket containing printed matter
MAKKAL CHINTHANAI-Dec - 2021

Price Rs. 8-00
Date of Publication 30-12-2021



பெறுநர்

திரு ______ அவர்கள்

C129
திருவருள் திரு சுவாமிகள் அவர்கள்
கோவிலூர் ஆதீனம்
கோவிலூர்
மானகிரி அஞ்சல்
காரைக்குடி வழி



அச்சிட்டோர் : சண்முகநாதன் அச்சகம், குன்றக்குடி ✆ : 9443590288